சுபோவி
வெளியீட்டகம்
2012

# முதுசொம்

இரு கூத்தும் நா நாடகமும்



க.இ.கமலநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நாடக குரு

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்

அவர்களுக்கு

எனது முதல் வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு :முதுசொம்
ஆசிரியர் :திரு.கனகர் இரத்தினம் கமலநாதன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி
முதற்பதிப்பு :03.06.2012
பதிப்புரிமை :திருமதி. இராஜபத்மினி கமலநாதன்
24/5, 2ம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.
வெளியீடு : சுபோவி வெளியீட்டகம்
தாள் அளவு :7.5x5.0
பிரதிகள் :1000
அச்சிட்டோர் :கக்ஸ்ரோன் பிறின்டேர்ஸ்
1/1 நவீன சந்தை கட்டிடம்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
விலை :300/=

Title :Muthushom
Auther :Mr.Kanagar Ranam Kamalanthan
First Edition :03.06.2012
Copy Right :Mrs.Rajapathmin Kamalanathan
Publication :Shubovi Publication
No.of.Copies :1000
Printers :Caxton Printers
1/1, New Market Building,
Point Pedro Road, Kalvijankadu Junction,
Kalvijankadu.
Price :300/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்துச்செய்தி | iii |
| ஆசிச்செய்தி | iv |
| உங்களுடன் பேசுகிறேன் | v |
| முதுசொம் | 01-29 |
| தர்மம் வெல்லும் | 30-55 |
| பொய்யாய் பழங்கதையாய் | 56-65 |
| உங்கையிற் பிள்ளை | 66-82 |
| நேசமும் வைத்தனையோ | 83-103 |
| நித்தலும் கைதொழுவேன் | 104-117 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நாடகத்துறை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை முனைப்புடன் செயற்பட்டுவரும் க. இ. கமலநாதன், கல்லூரிக்கு உள்ளேயும், சமூகம் சார்ந்தும், பல நாடக ஆற்றுகைகளை நடாத்தி வருகின்றார். சம காலத்தில் சிறுவர் நாடகங்கள், நவீன நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், விழிப்புணர்வு நாடகங்கள், வீதி நாடகங்கள், கூத்துக்கள், குறும்படங்கள் போன்றவற்றைத் தானே எழுதி, இயக்கி நடித்து ஆற்றுகைப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

வட இலங்கை சங்கீத சபையில் "நாடகக் கலாவித்தகர்" பட்டத்தினைப் பெற்றுக்கொணடதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் B.A, Dip in Ed, M.A in Culture, MEd (Merit) ஆகிய பட்டங்களையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. நாடத்துறையூடாக முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சிறந்த வளவாளராகச் செயற்பட்டு வருகின்றார்.

கல்வித்துறையில் பல நவீனத்துவங்கள் இணைந்து விட்ட போதும் கற்றல் கற்பித்தல் சாதனமாக நாடகத்துறை மிகப் பலத்துடன் மிளிர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது. ஏனைய பாடத்துறைகளையும் இலகுவாகக் கற்பதற்கு, கற்பிப்பதற்கு நாடகத்துறை பெரிதும் உதவுகின்றது. இந்த வகையில் 2011 இல் "ஆச்சி அச்சாப் பாட்டி" எனும் நாடக நூலைத் தந்த நூலாசிரியர் 2012 இல் "முதுசொம்" எனும் இருகூத்தும் நா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமும் அடங்கிய நாடக நூலை வெளியிடுகின்றார். இந்நாடகங்கள், கூத்துக்கள் பல தடவைகள் கல்லூரியில் மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்றவை. மேலும் பல களங்களில் மேடையேற்றப்பட்டு கிடைத்த வெற்றிகளின் வெளிப்பாடாகவே. இந் நாடகங்கள் நூலுருப் பெறுகின்றன.

விரிவுரையாளர் க. இ. கமலநாதனால் ஆரம்பிக்கப்பட்ட "குழந்தை அரங்கக் குதூகலிப்பு விழா" மாணவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். ஏனெனில் நாடகத்துறை முகிழ்நிலை ஆசிரியர்கள் நெறியாள்கை மேற்கொள்ள, கல்லூரியின் அனைத்துத்துறை சார் முகிழ் நிலை ஆசிரிய மாணவர்களும் பங்கேற்கும் விழாவாகவும், நாடகத்துறை சார் அனுபவத்தை நேரடியாகப்பெற்று "ஒரு ஆசிரியர் சிறந்த நடிகராக இருக்க வேண்டும்" என்ற அறிஞர்களின் கூற்றை வலுப்படுத்துவதாகவும் குழந்தை அரங்கக் குதூகலிப்பு விழா அமைந்து காணப்படுகின்றது.

திரு. க. இ. கமலநாதன் அவர்களின் படைப்புக்கள் பாராட்டத்தக்கவை. 2012 ஆம் ஆண்டிற்கான அரச சிறுவர் நாடகப்போட்டியிலும் பல விருதுகளைப்பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார். அவரது ஆக்கங்கள் தொடர்ந்தும் வெளிவர வேண்டும். அவை நூலுருவிலும் இறுவட்டு வடிவிலும் வந்து ஆசிரியர்,மாணவர்கள், நாடக ஆர்வலர்களுக்கு உதவ வேண்டும் என வாயார மனதார வாழ்த்துகின்றேன்.

S.K. யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி - கோப்பாய்.
03.06.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

திரு.க.இ.கமலநாதன் நாடகம். குறும்பட இயக்கம் என்பற்றிற்கூடாக இன்று பேசப்படுகின்ற ஒரு கலைஞன். ஐந்து வலயங்களிலுமுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நாடகக் களப் பயிற்சிகளைத் திறம்பட செய்து வருகின்றார். நாடகத்துறையின் தாய் எனப்போற்றப்படும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களைத் தன் நாடகக் குருவாகக் கொண்டு செயற்பட்டு வருபவர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி தொடங்கிய காலத்திலிருந்தே கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு பல நாடகங்களை ஆக்கி ஆற்றுகை செய்து வருகின்றார். அவை கொழும்பு, திருகோணமலை, வவுனியா, என பல இடங்களில் மேடையேற்றப்பட்டதுடன் பல விருதுகளையும் பணப் பரிசில் களையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

நாடகங்கள் மூலம் கிடைத்த தேசிய மட்டவெற்றிகள் நாடகத்துறையை ஆரம்பிப்பதற்கு உந்து சக்தியாக அமைந்தது. 2003 இல் கல்வியமைச்சின் அனுமதியுடன் நாடகமும் அரங்கியலும் துறை ஆரம்பிக்கப்பட்டபோது வருகை தரு விரிவுரையாளராக கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும், இணைக்கப்பட்ட விரிவுரையாளராக க.இ.கமலநாதனும் சிறப்பாச் செயலாற்றினார். நாடத்துறையை ஆரம்பிக்க கல்லூரியை அண்டியுள்ள பாடசாலைகளில் இடைநிலைப் பிரிவில் அழகியல் பாடத்துறையில் நாடகமும் அரங்கியலும் பாடநெறி இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே (இடையிட்ட கற்பித்தற்பயிற்சி, ஒரு வருட முழுமையான கற்பித்தற்பயிற்சிக்காக) ஆரம்பிக்க முடியும் என்ற கல்வியமைச்சின் கோரிக்கையை நிறைவேற்ற, இளவாலை சென் கென்றீஸ் கல்லூரியில் இருந்து மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம் வரையான இருபதுக்கும் மேற்பட்ட பாடசாலை களுக்கு நேரடியாகச்சென்று இடை நிலைப்பிரிவுகளில் நாடகமும் அரங்கியலையும் ஆரம்பிப்பதற்கு முழுமூச்சுடன் செயலாற்றினார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைத் தளமாகக் கொண்டு இயக்கப்பட்ட கல்வி விழிப்புணர்வுக் குறும்படங்கள் பலரதும் பாராட்டுக்களையும் வரவேற்பையும் பெற்றன. யாழ் மாவட்டத்திற்கு அப்பால் போரால் நலிவடைந்த வன்னிப் பிரதேச மாணவர்களுக்கும் அரங்கினூடாக மகிழ்ச்சிகரமாகக் கற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். கட்டாயக்கல்வி விழிப்புணர்வு வீதி நாடகங்களை அவ்வவ் வலயங்களினூடாக செயற்படுத்தி வருகின்றார்.

இவரால் வெளியிடப்படும் இரண்டாவது நாடக நூல் இதுவாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயன்தரும் பல படைப்புக்கள் இனிவரும் காலங்களிலும் வெளி வர வேண்டும். தன் படைப்புக்கள் அனைத்தையும் நூல் உருவில் கொண்டு வர வேண்டும் என வாழ்த்தி இறையருளையும் வேண்டுகின்றேன்.

பாலசுப்பிரமணியம் தனபாலன்
இணைப்பாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி -கோப்பாய்
03.06.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு பேசுகின்றேன்.....

எனது முதலாவது படைப்பான ஆச்சி "அச்சாப் பாட்டிக்கு "கிடைத்த வரவேற்பும், கௌரவமும் இரண்டாவது நாடக நூலை வெளியிடக் கிடைத்த அங்கீகாரமாக ஏற்றுக்கொள்கின்றேன். மிகச் சிறு வயதிலேயே நாடகச் செயற்பாடுகளுடன் என்னை இணைத்துக் கொண்டாலும் ஐம்பதாவது அகவையின் பின் தான் எனது நாடகங்களை நூலுருவாக்கும் துணிவு பிறந்தது.

பல களங்களில் ஆற்றுகை செய்து பரீட்சிக்கப்பட்ட பின்னர் தான் எனது நாடகங்களை நூலுருவாக்குகின்றேன். சிறுவர் நாடகங்களை ஆசிரியர்கள் அனைவருமே நடித்து அனுபவம் பெறவேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு பீடாதிபதி S.K.யோகநாதன் Sir காலத்திலேயே நனவாகியது. "குழந்தை அரங்க குதூகலிப்பு விழா" என்ற மகுட வாசகத்தின் கீழ் ஆண்டுதோறும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் சிறுவர் நாடகங்களை ஆற்றுகை செய்து வருகின்றேன். அதன் தொகுப்பு எனது முதல் நூல் ஆகும்.

நாடகத்துறை ஆரம்பித்த காலம் முதல், உலக நாடகதின விழாவைக் கொண்டாடுவதனூடாக ஆசிரிய மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், புதிய நாடகம் சார் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கல்லூரி விழாக்களில் மேடையேறிய நாடகங்கள் இந்நூலில் இடம் பிடித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலாக்கண்டி கிருஸ்ணர் ஆலய வைகுந்த ஏகாதசி விழாவுக்கென என்னால் ஆக்கப்பட்ட "தர்மம் வெல்லும்" எனும் கூத்துருவ நாடகம் பல்வேறு காலங்களிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டன. அத்துடன் சிந்து நடை மெட்டில் ஆக்கிய முதுசொம் எனும் விசேட கூத்தும் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டு வரவேற்புப் பெற்ற நாடகங்களாகும். இவை மாணவர்க்கும் நாடகத்துறை சார்ந்தவர்களுக்கும், ஆசிரியர்களும் பயன்படும் என நம்புகின்றேன்.

இந்நூலை ஆக்க இறையருளும் குருவருளும் கைகூடியுள்ளது. எனது குருவான நாடகத்தாய் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களை வணங்கியே நான் நாடகக் கருமங்களில் ஈடுபடுவேன். வெற்றி காண்பேன்.

எனது கலை முயற்சிகளில் கை கோர்த்து நிற்கும் என் மனைவி இராஜபத்மினிக்கும, என் தோளோடு தோள் நின்று ஊக்கம் தரும் நண்பன் பா.தனபாலனுக்கும், தர்மம் வெல்லும் கூத்துருவ நாடகத்தின் பாடல்களுக்கு இராகங்களை நான் எழுதுவதற்கு முழு உதவிகளையும் செய்த சங்கீதத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவுக்கும் சிறந்த முறையில் அச்சுப்பதித்து நூலுருவாக்கிய கல்வியங்காடு கக்ஸ்ரொன் அச்சகப் உரிமையாளர் திரு.இ.ஜசிலன் அவர் களுக்கும் எனது நன்றிகள்.

க.இ.கமலநாதன்
24/5, 2ம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.
03.06.2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுசொம்

## இரு கூத்தும் நா நாடகமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுசொம்

சிந்து நடையில் அமைக்கப்பட்ட விசேட கூத்து

முத்தோரைப் போற்றுதல், பெற்றோர்களைக் கனம் பண்ணுதல், ஆசிரியத்துவத்தை மதித்தல், சிறுவர் உரிமைகளை ஏற்றுக் கொள்ளல் எனும் விழுமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டதே "முதுசொம்" எனும் சிந்துநடை விசேட கூத்தாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களினால் ஆடப்பட்ட இக் கூத்தானது, உள்ளகப் பயிற்சி காலத்திலும், நிரந்தர ஆசிரியர்களான பின்பும் பல பாடசாலைகளில் போட்டிக்காகவும், பொது விழாக்களுக்காகவும் தொடர்ச்சியாக மேடையேற்றப்பட்டு வருகின்றது. கோட்ட, வலய, மாகாண, மாவட்டப் போட்டிகளிலும் இக்கூத்து சிறப்பிடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கூத்தில் உலாவரும் பாத்திரங்கள்

முத்துலிங்கம் - அப்பப்பா, ஓய்வு பெற்ற ஆசிரியர்.
விசாலாட்சி - அப்பம்மா, ஓய்வு பெற்ற ஆசிரியை
நடராஜன் - முத்துலிங்கத்தின் மகன், கணக்காளர்.
சிவ சக்தி - முத்துலிங்கத்தின் மனைவி, வீட்டுப்பணி.
சிவந்தன் - நடராஜனின் மகன், மாணவன்.
சுபானுஜன் - டொக்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காருண்யா -டொக்டரின் மனைவி, இவரும் டொக்டர்.
ரதன் -டொக்டரின் மகன்.
அபிநயா -டொக்டரின் மகள்.
கனவுத்தேவன் -ஒருகற்பனைப் பாத்திரம்.
சிவந்தன் -பெரியவனாய் வளர்ந்த சிவந்தன் (கனவில்)
மதுஷா -சிவந்தனின் மனைவி (கனவில்)
-தோழர்கள்

## காப்பு பாடல்

மெட்டு - ஓராணைக் கண்ணே...

வித்தக விநாயகனே -நல்ல
தத்துவத்தின் நாயகனே
நித்தமும் உனைப் பணிந்தோம் - சக்தி
அத்தனையும் தாருமையா.

முந்தி முந்தி விநாயகனே - அழகன்
முருகனுக்கு மூத்தவனே
மூத்தோரை முத்துக்களென்போம் - அதனை
முழுமனதாய் ஏற்றுக் கொள்வோம்
காப்பதாமே காப்பதாமே - எங்கள்
கணபதிக்கு காப்பதாமே
காப்பதாமே காப்பதாமே - எங்கள்
மூத்தோருக்கு காப்பதாமே

**காப்புப்பாடல் முடிவடைய அனைவரும் மேடையை விட்டு வெளியேறுவர். சிவந்தன் மேடையில் தோன்றுவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவந்தன்:** புத்தகம் படிச்சுக்களைச்சுப் போனேன்.
அப்பம்மாவே கேளும் - நானும்
ஓடிப்பிடிச்சு விளையாட
அப்பம்மாவே வாரும்

புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து
கண்கள் பூத்துப் போச்சு -இப்படி
நித்தம் நித்தம் நடக்குமென்றால்
நிம்மதியும் போச்சு.

**விசா :** அம்மா சொல்லை நல்லாக் கேட்டுப்
படியுங்க நீங்க
நாளை எம்மாம் பெரிய டொக்டராக
வருவீங்க நீங்க
ஐய்யய்யோ நேரமிருக்கு இன்னும்
கொஞ்சம் படியும் - அம்மா
எட்டி இங்கே பாத்தாரெண்டால் கன்னம்
கொஞ்சம் சிவக்கும்

**சிவ:** என்னால் முடியாது அப்பம்மா என் கண்கள் பஞ்சடைந்து விட்டன என் உள்ளமும் சோர்ந்து விட்டது. அம்மா தான் அப்படியென்றால் நீங்களுமா?

**அப்பம்மா:** செல்வா யதார்த்தம் எனக்கு நன்றாகப் புரிகிறது ஆயினும் உன் அம்மா.....

**சிவ:** அம்மா....... அம்மா........ அம்மா........ இப்போது எதற்கும் அஞ்சாத என் அப்பப்பாவை இங்கே அழைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு - கழுமரத்தை தேடியெல்லோ...

சிவ: அன்பே வடிவான என்தனுயிர்
அப்பப்பா - நானும்
மனம் சோர்ந்து வாடுகிறேன்
எந்தனுயிர் - அப்பப்பா
குறைதீர்க்க ஓடிவாராய் எந்தனுயிர்
அப்பப்பா - என்னை
சிறைமீட்க ஓடிவாராய்
எந்தனுயிர் - அப்பப்பா

சிவ-வச: அப்பப்பா ஓடி வாருங்கள் என் மனக்குறையைத் தீர்க்க ஓடோடி வாருங்கள்.

மெட்டு - ஆதிசிவன் மைந்தனல்லோ...

முத்துலிங்கம்: சின்ன ராசன் மூத்த மைந்தன் நானும்
பாலராசன் ஓடி வாறேன்
சபையோரே - ஐயா பெரியோரே.

பென்னம் பெரிய வயது - ஆகா
எழுதுபதைத் தாண்டினாலும்
சின்னப் பிள்ளை தான்
நானும் பாலராசன் தான்

ஆசிரியத் தொழில் செய்தேன் இப்ப
பென்சன் எடுத்துப் போட்டு
வீட்டில் நிற்கிறன் - நானும்.

மூச்சிரைக்க வேலை செய்தேன் - பலர்
முன்னேற நானும் தூண்டுகோலாயிருந்தேன்.
ஓல்ட் இஸ் ஹோல்ட் என்பேன் - நானும்
முதுமையைக் கண்டுவிட்டு அஞ்சி ஓடிடேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புப் பேரன், அப்பப்பா என்று அழைத்த குரல் என் காதில் கணீர் என்று கேட்டது. அவனுக்கு ஏதும் சங்கடங்கள் ஏற்படுமானால் அவன் சங்கடங்களை அழித்து அவன் சந்தோசமாய் சிரித்து மகிழ நானும்.......

மெட்டு - சோமன் உடுக்கல்லோ...

பேரனைத் தேடியல்லோ
பால ராசன் நானும்
படு வேகமாய்ப் போறேனாம்
பால ராசன் நானும்
ஆரென்னைத் தடுத்தாலும்
அழுங்குரல் தடுப்பேன் - பேரன்
சிரித்து மகிழ்ந்திடவே
ஆனதைச் செய்வேன்

முத்து: பேரா என்னை ஏன் அழைத்தாய் சூரா....

சிவ: இதோ என் அப்பப்பா வந்து விட்டார் இனி என் ஆனந்தத்திற்கு எல்லையேது?

முத்து: உன் கலக்கத்தின் காரணத்தை நான் அறியலாமா பேரா?

சிவ: சொல்கிறேன் அப்பப்பா

மெட்டு - முக்கால் வளமாய்...

புத்தகம் [illegible]டிச்சுக் களைச்சுப் போனேன்
அப்பப்பாவே கேளும் - நானும்
ஓடிப்பிடிச்சு விளையாட
அப்பப்பாவே வாரும்
புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் பூத்துப் போச்சு - இப்படி
நித்தம் நித்தம் நடக்குமென்றால்
நிம்மதியும் போச்சு

அப்பப்பா படிபடியென்று அம்மா என்னை நெருக்குவதால் நான் மனம் சோர்ந்து விட்டேன் உடல் களைப்படைந்து விட்டேன். இடையிடையே விளையாடவும் ஆசைப்படுகிறேன். நான் பரீட்சையில் கட்டாயம் சித்தியடைவேன்.

மெட்டு - ஆதிசிவன்...

முத்து: படிக்க வேண்டும் படிக்க வேண்டும் - பேரா
பள்ளி சென்று பாடங்களைப் படிக்கவேண்டும்

சிவ: படித்திடுவேன் படித்திடுவேன் நானும்
பள்ளி சென்று பாடங்களைப் படித்திடுவேன்

முத்து: காலை எழுந்தவுடன் - வீட்டில்கடவுளைத்
தொழுத பின் படிக்க வேண்டும்

சிவ: காலை எழுந்திடுவேன் - வீட்டில்
கடவுளைத் தொழுது பின் படித்திடுவேன்

முத்து: மாலை நேரம் ஓய்வு நேரம் -
அப்போசந்தோசமாய் ஓடிவிளையாடவேண்டும்.

சிவ: மாலை நேரம் ஓய்வு நேரம்- அப்போ
சந்தோசமாய் விளையாட முடியவில்லை

முத்து: ஆடலாமே பாடலாமே - படம்
கீறலாமே நாடகமும் நடிக்கலாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : ஆடிப்பாட முடியவில்லை - படம்
கீறவும் நாடகம் நடிக்கவும் முடியவில்லை
அம்மா அப்பா கட்டுப்பாடுகள் - அதை
மீறி என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை

முத்து: பெற்றோர்களே சிறுவர் உரிமைகளை மீறலாமா? இது அடிப்படையில் பெரிய தவறல்லவா சரி போகட்டும். இப்போது நாம் விளையாடலாம்.

மெட்டு - கொத்தி கொத்தி...

சிவ : கெந்திக் கெந்தி அப்பப்பா நான்
விளையாட நல்ல
கோடு ஒன்று மணலில் கீற வேண்டும்.

முத்து: கெந்திக் கெந்தி பேரா நீயும்
விளையாட நல்ல
கோடு ஒன்று மணலில் கீறிடுவேன்.

சிவ: கண்ணைப் பொத்தி அப்பப்பா
நான் விளையாட
அப்பம்மாவின் கண்ணைப் பொத்தி
துணியால் கட்ட வேண்டும்.

முத்து: கண்ணைப் பொத்தி பேரா நீயும் விளையாட
அப்பம்மாவின் கண்ணைப் பொத்தி
துணியால் கட்டிடுவேன்.

சிவ:
தோழர்களே! நீங்களும் வாருங்கோவன்
நாமும் தாளம் போட்டு விளையாடிடுவோம்.

சிவசக்தி: கோபத்துடன் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி...

படிக்கும் நேரத்தில் ஓடிவிளையாட
அனுமதித்தது ஆராரார்
நடிப்பும் பாட்டும் ஆட்டமும் - போட்டிட
அனுமதித்தது ஆராரார்

**சிவந்தன் அப்பப்பாவிற்கு பின்னால் ஒழித்து நின்று பயப்பிடுதல்**

**முத்து :** மனதைக் கவரும் மாலை நேரத்தில்
கொஞ்ச நேரம் விளையாடலாம்
மகிழ்ச்சியான மனமிருந்தால்
நினைத்ததனைத்தும் சாதிக்கலாம்.

**சிவசக்தி:** உலகம் எங்கையோ போகுது - உங்கட
அறிவுரை இங்கே தேவையில்லை
கலகம் செய்யிற கண்டதைச் சொல்லுற
அலம்பல் கதைகள் தேவையில்லை

**முத்து :** உலகத்தோட ஒட்டி வாழ
பொழுது போக்கும் தேவை பிள்ள
அழுத்தம் அதிகமாகிவிட்டால்
ஆபத்து வாழ்வில் தோன்றும் பிள்ள

**சிவசக்தி :** என்ர அறிவு எனக்குப் போதும்
புத்தி சொல்ல யாரும் தேவையில்லை
தத்துவம் பேசிற பித்தர்கள் பிள்ளையைக்
குட்டிச் சுவராக்கத் தேவையில்லை

**விசாலாட்சி:** நாங்கள் பெற்று வளர்த்த பிள்ள
பட்டம் பதவிகள் பெற்றதால்
உனக்குப் புருஷன் ஒருத்தன் கிடைச்சான்
கனக்க கதைக்க வேண்டாம் பிள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவசக்தி:** கிழடுகள் ரண்டும் சேந்து என்னை வெருட்டவா பாக்கிறியள்? என்ர பிள்ளையை எப்பிடி வளத்து ஆளாக்க வேணும் என்பது எனக்குத் தெரியும்

**சிவந்தனின் அப்பா களைப்புடன் ஒவ்விசிலிருந்து வரல்**

மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி...

**சிவசக்தி:**
தொண்டை கிழிந்திட நானொருத்தி - இஞ்ச
அண்டைக்கும் இண்டைக்கும் கத்துறனே
சண்டைக்கு வாறார் கொப்பரும் கொம்மாவும்
கண்ணை மூடிக்கொண்டு போறியளே

**நடராஜன்:**
பிரச்சினை பிரச்சினை ஒவ்விஸ்
நிறைப் பிரச்சினை
நிம்மதி தேடி வீட்டுக்கு வந்தால்
இங்கையும் ஒரே பிரச்சனை
கண்ணை மூடிக்கொஞ்ச நேரம்
ஓய்வெடுக்கப் போகிறேன்.
கத்திக்குளறி சத்தம் போட்டால்
நடக்கும் பெரிய பிரச்சினை
**( வீட்டுக்குள் செல்வார் )**

**சிவசக்தி:**
பிரச்சினை பிரச்சினை உங்களால்
தான் பிரச்சினை
குடும்பம் குழம்பிப்போகப் போகுது உங்களால்
தான் பிரச்சினை
எங்கேயும் துலைஞ்சு போனீங்களெண்டால்
நிம்மதி எங்கள நாடி வரும்
பிள்ளையின் படிப்பும் வெற்றியும் மகிழ்வும்
எங்களைத் தேடி ஓடி வரும்.

**சிவசக்தி உள்ளே செல்வார்**

**முத்து** ஏன் இடிந்து போய் இருந்து விட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி: இனி என்ன செய்வது வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை பேரன் சாப்பிட்டு விட்டு தூங்கிவிட்டான் போல் தெரிகிறது.

முத்து: நல்லது உடனடியாக புறப்படு......

மெட்டு - துரையே துரை வடிவே....

உடுப்பை எடுத்து மடிக்கப் பேரா.......
உடம்பெல்லாம் நோகுது
எனது செருப்பை எடுத்து வைக்க நெஞ்சில்
நெருப்பள்ளிக் கொட்டுது.

விசாலாட்சி: மருந்துப் பேணி எடுக்கப் பேரா
மனசெல்லாம்நோகுது உந்தன்
குறும்புத் தனத்தை நினைக்கக்
கண்கள் குழமாய்ப் போகுது.

முத்து: உந்தன் விளையாட்டு மைதானம்
எந்தன் நெஞ்சுதானே - நாமும்
வெகுதூரம் போறோமடா
வேதனையாலே

விசாலாட்சி: மடியில் கிடந்து கதைகள் கேட்பாய்
எந்தனுயிர் பேரா - நாமும்
நெடும் பயணம் போனமென்றால்
நீயும் என்ன செய்வாய?

முத்து: சரி சரி பேரன் கண் விழிக்க முதல் புறப்படு

**இருவரம் முற்றத்திற்கு வரும் வேளை வெளியில் உலரப் போட்ட சிவந்தனின் பாடசாலை சீருடைகளைப் பார்த்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் காயப்போட்ட உடுப்பை
ஏண்டி எடுக்கல பேரன்
விடியப்பள்ளிக்குப் போக வேணும்
அயனும் பண்ணேல்ல

விசாலாட்சி: ஒரு நொடியில் உடுப்பை எடுத்து
அயனும் பண்ணுவேன் - அதனை
அடுக்கிப் பெட்டியில் வைச்சு போட்டு
நானும் வந்திடுவேன்
தப்பு ஒண்டு நீங்களும் தான்
செய்து போட்டியள் - பேரன்
சப்பாத்தைப் பொலிஸ் பண்ண
மறந்து போனியள்.

முத்து: பாத்தியேடி பெரிய பிழை
செய்யப் பார்த்தனே -பேரன்
சப்பாத்தை இப்ப பொலிஸ்
பண்ணப் போறனே.

**அப்பம்மா சப்பாத்தை எடுத்து கொடுக்க அப்பப்பா பொலிஸ் பண்ணுவார், மருமகள் கோபமாக வருவதைக் கண்டு இருவரும் எழுந்து**

முத்து: நாங்கள் போட்டு வாறோம் பிள்ள

சிவசக்தி: வரவேண்டாம் போங்கோ போங்கோ உங்களுக்கு இஞ்ச இனி இடமில்லை இது உங்கட சாப்பாட்டுக் கோப்பைகள் இதையும் கொண்டு போங்கோ....

**இருவரும் வெளியேறல் இதன் போது சிவந்தன் மேடைக்கு வருதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவ:** அப்பப்பாவின் அறையில் படுத்துறங்கினால் தான் எனக்கு தூக்கம் வரும். என் பேரன் பேத்திக்கு சொக்கலேட் என்றால் கொள்ளை ஆசை என்று சொல்வார்கள். மூவரும் சாப்பிட்டுவிட்டு அப்பம் மாவின் கதையைக் கேட்டுக் கொண்டு கண் அயர்வோம். அப்பம்மா, அப்பப்பா எங்கே போனீர்கள் - **(தாய் வருகை)**

**மெட்டு - கொத்சி கொத்சி...**

**சிவ** அப்பப்பாவும் அப்பம்மாவும் எங்கேயம்மா எனக்
கொன்றும் சொல்லாமல் எங்கே போனாரம்மா

**சிவசக்தி:** பார்த்துப் பார்த்து நீயும் படிப்பதற்கு
அறிவைப் பெறுவதற்கு
ஒரு கொம்பியூட்டர்
மகனே வாங்கித்தாறன்

**சிவ:** அணைத்தணைத்து எனக்கு அறிவூட்டும்
ஆசை மொழி பேசும்
அப்பப்பாவும் அப்பம்மாவும்
எங்கே போனாரம்மா
கொஞ்சிக் கொஞ்சிக் என்னோடு விளையாடும்
நீதிக் கதைகள் சொல்லும்
என் பேரன் பேத்தி எங்கே போனாரம்மா

கொஞ்சிக் கொஞ்சிக் நானும் நீயும்
கதைப்பதற்கு - நல்ல
கையடக்கத் தொலைபேசி
வாங்கித்தாறேன்.

**சிவசக்தி:** இன்றைய நவீன உலகத்தோடு நீயும் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக கல்வி கற்க ஒரு கொம்பியூட்டர் ஒரு கான்போன் மற்றும் நவீன சாதனங்கள் நான் வாங்கித் தாறேன் மகனே.

சிவ: அப்பப்பா, அப்பம்மா இருவரும் இங்கே வந்த பின் இதைப்பற்றி யோசிக்கலாம்.

மெட்டு - கொஞ்சி கொஞ்சி

சிவசக்தி: எங்கேயடா? மகனே கண்டுவந்தாய் - எட
என்னிலுமோர் பெரிய பேரன் பேத்தி
மறந்திடடா மகனே மறந்திடடா - உன்
அம்மா சொல்லைக் கேட்டு நடந்திடடா

சிவ: மறப்பதில்லை தாயாரே மறப்பதில்லை
என் தெய்வங்களை தாயாரே மறப்பதில்லை

சிவசக்தி: எல்லாம் உன் நன்மைக்குத் தான்
போய்ப் படி போ ......போ

**சிவந்தன் இடது மத்திய மேடையால் வெளியேற அப்பப்பாவும், அப்பம்மாவும் வலது மத்திய மேடையால் பிரவேசிப்பர். Dr.சுபானுஜன் குடும்பத்தினர் பின் வலது மேடையால் பிரவேசிப்பர்.**

Dr.சுபா: இந்த வீதியால் வரும் பெரியவரைப் பார்த்தால் என்னை ஆளாக்கிய தெய்வம் போலல்லவா தெரிகிறது.

மெட்டு - துரையே துரைவடிவே...

Dr.சுபா: பெரியவரே பெரியவரே உங்கள்
பெயரை நான் அறியலாமா?

முத்து: எழுபது.... வயது வந்ததும்
என் பெயர் பால.... ராசன் என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr.பானு: எனக்கு எழுத்தறிவித்த இறைவன் நீங்கள்
குருவும் நீங்கள்
உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன்.

முத்து: எட சிவராசன் மகன் சுபானுஜன் நீர்
இப்போ பெரியவராக வளர்ந்து விட்டீர்

Dr.சுபா: என் அறிவுக் கண்ணை திறந்த ஆசான்
பாதம் தொட்டு வணங்குகிறேன்.

Dr. சுபா: இன்று அருமையான தினம் ஆசிரியர் தினம் இன்றைய தினம் என் வீடு வந்து விருந்துண்டு செல்ல வேண்டும்.

முத்து: நல்லது தம்பி நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்? குழந்தை குட்டிகள்?

Dr. சுபா: நான் டொக்டராக இருக்கிறேன் சுபானுஜன் M.B.B.S. இவள் என் மனைவி இவரும் டொக்டர் தான் இவர்கள் எனது மகனும் மகளும்.

முத்து: டொக்டரா? மனித வடிவில் உலாவருகின்ற தெய்வங்கள் அல்லவா நீங்கள்.

Dr. சுபா: அந்த தெய்வங்களை உருவாக்கும் பெரிய தெய்வங்கள் நீங்கள், ஆசிரியர்கள், எனவே ஆண்டு தோறும் போற்றுதற்குரியவர்களை, என் வாழ்விற்கு ஒளி காட்டிய ஆசிரியத் தெய்வங்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுவது என் பணி இன்று என் சற் குருவிடமே ஆசீர்வாதம் பெறப்போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதன்: பெரியவரே வணங்குகிறேன்

காருண்யா: இது அன்பே உருவான எனது மாமன் மாமிக்காக நான் வாங்கிக் கொடுத்த ஆசனம், இறுதிக் காலம் வரை அவர்கள் இதில் இருந்தே அருளாட்சி செய்தார்கள். எமது வீட்டைக் கோயிலாக்கினார்கள் வாருங்கள் வந்து ஆசனத்தில் அமருங்கள்.

அபிநயா: நாங்கள் உங்களுக்கு பாத பூசை செய்யப் போகின்றோம்.

முக்கால் வலமாய் வந்தோம் - குருவே
உம்மைநாங்கள்
தலை பணிந்து வணங்குகிறோம் -
குருவே உம்மை
நாற்கால் வலமாய் வந்தோம் - குருவே
உம்மை நாங்கள்
நாளும் பொழுதும் தோத்தரிப்போம்
குருவே உம்மை.

ரதன்:
பன்னீரால் கால் கழுவி உமக்குப்
பாத பூசை செய்திடுவோம்
பூக்களிட்டு பாதம் தொட்டு உம்மை
தலை பணிந்து வணங்குகிறோம்

காருண்யா:
ஆசிரியர் பெருமை பேசும் தினத்தில்
ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டோம்

காருண்யா நாங்கள் எல்லோருமாக உணவு உட்கொள்வோம் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முத்து:** ஒரு ஆசிரியர் எப்போது மனம் குளிர்கிறான் என்றால் தனது மாணவன் பெருமையுடன் வாழ்வதை காணும் போது தான்.

**விசாலாட்சி:** அந்த பேற்றை இன்று நாம் பெற்றோம்

**ரதன்:** அப்பபப்பா வாருங்கள் சாப்பிடுவோம்

**அப்பப்பா கண்கலங்குதல்**

Dr சுபா: குருவே ஏன் கலங்குகிறீர்கள்?

**விசாலாட்சி:** அது ஆனந்தக் கண்ணீர்

**முத்து:** வாடா என் செல்லப்பேரா

**எல்லோரும் சாப்பிடுவதற்காக வெளியேற சிவந்தன் அமுது கொண்டு மேடைக்கு வருதல்**

**சிவ:** என் அப்பப்பாவும் அப்பம்மாவும் இன்னும் வரக் காணோம். நான் என்ன செய்வேன். விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே துணை நீரே

மெட்டு - துரையே துரை வடிவே...

**சிவ-பாடல்:**

பிள்ளையாரே .... பிள்ளையாரே...
நானும் என்ன பாவம் செய்தேன்
அப்பப்பாவைக் காணவில்லையே....
பிள்ளையாரே பிள்ளையாரே....

பசியுமிப்போ வருகுதில்லை
உணவைக் காண அப்பம்மாவின்
நினைவு தானே வருகுது...
பிள்ளையாரே பிள்ளையாரே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி செல்ல மனமுமில்லை
புத்தகத்தைக் காணமெத்தக்
கோபமிப்போ வருகுது...
பிள்ளையாரே பிள்ளையாரே....

ஓடி வாரும் ஓடிவாரும்
அப்பப்பாவையும் அப்பம்மாவையும்
என்னிடத்தில் கூட்டிவாரும் ...
பிள்ளையாரே பிள்ளையாரே...

சிவந்தன் அழுது கொண்டு மேடையை விட்டு வெளியேறுதல் கனவுத் தெய்வம் கோரமான ஆட்டத்துடன் பின்மத்திய மேடையால் பிரவேசித்தல்.

மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி...

கனவுத்தெய்: கறுப்புடுத்தி நிறங்கள் கட்டி
கனவுத் தெய்வம் நானும் இப்போ
விடு விடுவென்று நடைபயின்றேன்
கனவுத் தெய்வம் நானும்
ஏறுமாறாய் நடக்கின்ற
மனிதர் மனதில் நுழைந்து
இரவில் கனவு வடிவில் உண்மை
உரைத்திடுவேன் நானும்.

நான் கனவுத் தெய்வம் எங்கேயோ ஓர் அழுகுரல் கேட்கிறது அங்கே சென்று அக் குழந்தையின் கவலையைப் போக்குவேன்.

மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி...

அழுங்குழந்தை வளர்ந்தது போல்
நான் வேடமெடுப்பேன்
தாய் தந்தை செய்யும்
கொடுமையைத் திருப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்க்கு கொடுப்பேன்
பேரப்பிள்ளையை தூக்கிக் கொஞ்சிற
வேளையில் நானும் தடுப்பேன்
உண்மை தன்னை உணரும் வரைக்கும்
உலுப்பி உலுப்பி எடுப்பேன்.

பாடல் முடிவடைய கனவுத் தெய்வம் பின் மேடையில் நிற்க முதுமையடைந்த நடராஜனும் சிவசக்தியும் மகன் சிவந்தனின் மகனை (பேரப்பிள்ளையை) தாலாட்டுவது போல கனவு காண்பர்.

## கனவுக்காட்சி

**சிவசக்தி:** ஆரிராரோ ஆரிவரோ... ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்காய்

**நடராஜன்:** அடிச்சதாரெனச் சொல்லியழு
அடித்தவரை பிடித்திடுவோம்
ஆக்கினைகள் செய்திடுவோம்

மருமகள் மதுஸா கோபத்துடன் வருதல்.

**மதுஷா:** எத்தின நாள் சொன்னனான் உங்களுக்கு வருத்தம் என்ர பிள்ளையை தூக்காதேங்கோ எண்டு. எனிமேல் தூக்கக்கூடாது என்ர பிள்ளையை தொடக்கூடாது.

**சிவசக்தி:** பிள்ளை அழுதது அதுதான் தூக்கினனாங்கள்

**மதுஷா:** பெத்தவள் நான் இருக்கிறன் என்ர பிள்ளையை பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி...

சளியும் இழுப்பும் சலரோகமெண்டு
எத்தின நோயைக் காவுறியள்
உங்கட கிருமி பிள்ளைக்குத் தொற்றினால்
எத்தின வருத்தம் வந்து சேரும்

**சிவசக்தி:** அழுத பிள்ளையை அரவணைக்கிற
உரிமை எமக்கு இல்லையோ?
எங்கட பேரப்பிள்ளையைத் தூக்கிட
எமக்கு உரிமை இல்லையோ?

**மதுஷா:** இரண்டு கிழடுகளும் சேர்ந்து என்னை வெருட்டவா பாக்கிறியள்? என்ர பிள்ளையை எப்பிடி வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று எனக்கு தெரியும் இந் நேரம் ஒவ்விசிலிருந்து சிவந்தன் **(கனவில் வளர்ந்த சிவந்தண்)** களைப்புடன் வருதல் அப்போது

மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி...

**மதுஷா:** தொண்டை கிழிந்திட நானொருத்தி - இங்கே
அண்டைக்கும் இண்டைக்கும் கத்துறனே
சண்டைக்கு வாறார் கொப்பரும் கொம்மாவும்
கண்ணை மூடிக்கொண்டு போறியளே

**சிவந்தன்:** பிரச்சினை பிரச்சினை ஒவ்விஸ்
நிறையப் பிரச்சினை
நிம்மதி தேடி வீட்டுக்கு வந்தால்
இங்கையும் ஒரே பிரச்சனை
கண்ணை மூடிக்கொஞ்ச நேரம்
ஓய்வெடுக்கப் போகிறேன்.
கத்திக்குளறி சத்தம் போட்டால்
நடக்கும் பெரிய பிரச்சனை **(வெளியேறுதல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுஷா : பிரச்சினை பிரச்சினை
உங்களால் தான் பிரச்சினை
குடும்பம் குழம்பிப்போகப் போகுது
உங்களால் தான் பிரச்சினை
எங்கேயும் துலைஞ்சு போனீங்களெண்டால்
நிம்மதி எங்கள நாடி வரும்
பிள்ளையின் படிப்பும் வெற்றியும் மகிழ்வும்
எங்களைத் தேடி ஓடி வரும்.

நடராஜன்: நாங்கள் போறம் பிள்ள. எங்களை இனிமேலும் இப்படி பேச வேண்டாம். போட்டு வாறம்.

மதுஷா: போங்கோ போங்கோ உங்களை வாரி அணைக்கிறதுக்கு எத்தனையோ இடங்கள் இருக்குது போங்கோ இனிமேல் இந்தப் பக்கம் வரக்கூடாது. இந்தாங்கோ உங்கட சாப்பாட்டுக் கோப்பைகள் இதையும் கொண்டு போங்கோ.
**மருமகள் வெளியேறுதல் நடராஜனும் சிவசக்தியும் தமக்குரிய சாப்பாட்டு கோப்பைகளை எடுத்துக் கொண்டு**

நடராஜன்: அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்ற பழமொழி எங்களுக்கே பொருத்தமாகப் போச்சு
**அழுதல்**

சிவசக்தி: அழவேண்டாம் வாருங்கோ நாங்கள் போவோம்
**இருவரும் வெளியேறல் கனவுத் தெய்வம் வந்து பாடுதல்**

**மெட்டு - சிங்க வாகனத்தில் ஏறி**

கன.தெ: அழுங்குழந்தை வளர்ந்தது போல்
நான் வேடமெடுத்தேன்
தாய் தந்தை செய்யும் கொடுமையை
திரும்பி அவைக்குக் கொடுத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளையை தூக்கிக் கொஞ்சுகிற
வேளையில் நானும் தடுத்தேன்
உண்மை தன்னை உணரும் வரைக்கும்
உலுப்பி உலுப்பி எடுத்தேன்.

**கனவுத் தெய்வம் மேடையை விட்டு வெளியேறும் நடராஜனும் சிவசக்தியும் நித்திரை விட்டு எழுந்தவர்கள் போல் மேடைக்குள் ஓடிவருவார்கள்.**

**சிவசக்தி:** நான் ஒரு பொல்லாத கனவு கண்டேன் அப்பா.

**நடராஜன்:** நானும் அப்படித் தான் ஒரு கனவு கண்டேன்.

**சிவசக்தி:** சிவந்தன் ஓடிவாப்பா உடனேபோய் அப்பம்மா அப்பப்பாவை கூட்டிவருவோம்.

**சிவந்தன்:** ஓட்டப்பம் வீட்டை கூட முன்னம் காட்டப்பா அப்பப்பா, அப்பம்மாவை.

**Dr சுபா குடும்பம் அனைவரும் மேடைக்கு வருதல் நடராஜன் சிவசக்தி இருவரும் அப்பப்பா அப்பம்மா கால்களில் விழுதல்**

**சிவசக்தி:** எங்களை மன்னியுங்கள் எங்களுடைய தவறுகளை மன்னித்தருளுங்கள்.

**முத்து:** தவறுகளை நாங்களே உணர்ந்து கொண்டால் அதுவே பெரும் மன்னிப்புத்தான்.

**சிவந்தன்:** எனது அப்பப்பாவும் அப்பம்மாவும் வந்து விட்டார்கள் எனிமேல் என் சந்தோசத்திற்கு எல்லையே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜன்: மூத்தோர்கள் எங்கள் முதுசொங்களடா, பெற்றோர்கள் எங்கள் பொக்கிசங்களடா

எல்லா நடிகர்களும் இணைந்து வாழ்த்துப்பா பாடுவர்.

மங்களமாம் மங்களமாம் எங்கள்
சபையோருக்கு மங்களமாம்
மங்களமாம் மங்களமாம் எங்கள்
பெற்றோருக்கும் மங்களமாம்
மூத்தோரை முத்துக்கள் என்போம் - அதனை
முழுமனதாய் ஏற்றுக்கொள்வோம்
வாழ்த்துக்கள் சொல்லிடுவோம் - எல்லோரும்
வளமுடன் வாழ்க என்போம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம் வெல்லும்

கூத்துருவ நாடகம்

**கதைச்சுருக்கம்**

சனத்குமாரர்கள் நால்வரும் நாராயணனைத் தரிசிக்க வைகுந்தத்திற்கு வருகை தருகின்றனர். இவர்களின் தவவலிமையையும், முன் கோபத்தன்மையையும் அறியாத வைகுந்த வாயில் காப்போர் "நாராயணன் பள்ளி கொள்ளும் நேரமாதலால் இப்போது அவரைப் பார்க்க முடியாது" என முனிவர்களைத் தடுக்கின்றனர்.

கடும் கோபமடைந்த முனிவர்கள் "மனிதப் பிறப்பெடுத்து அவல வாழ்வு வாழ்வீராக" என்று சாபமிடுகின்றனர். சாபத்தை விலக்குமாறு வாயில் காப்போர் அழுது மன்றாடுகின்றனர். நாராயணனர் அவ்விடத்திற்கு வந்து அவர்கள் பிழையை மன்னிக்குமாறும், சாபத்தை மாற்றும் படியும் கேட்க முனிவர்களும் "ஏழுபிறப்புக்கள் நாராயணனுக்கு எதிரியாகப் பிறந்து அவர் கையாலேயே அழிக்கப்பட்டு வைகுந்தத்தை வந்தடையலாம் என்று கூற, வாயில் காப்போர் "முதற்பிறப்பான இரணியாட்சன், இரணியகசிபு சகோதரராகப் பிறந்து அழிந்து வைகுந்தம் வந்தடைவோம்" என்று அவ்வுருவைப் பெறுகின்றனர்.

இரணியாட்சன் பூலோகம் சென்று பூமாதேவி யிடமிருந்து பூலோகத்தைப் பறித்துக் கொண்டு பாதாளஉலகம் சென்று மறைந்து கொள்கின்றான். பூலோகத்தை மீட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணர் வராக அவதாரம் பெற்று இரணியாட்சனுடன் போர் புரிந்து அவனை அழித்து மக்களைக் காப்பாற்றுகின்றார்.

இரணிய கசிபு கடுந்தவம் செய்து சாகார வரம் பெறுகின்றான். அதாவது "இரவிலோ பகலிலோ மனிதரோ, மிருகமோ. ஒன்றாலும் தனக்கு அழிவு நேரக்கூடாது" என்று வரம் வேண்டிப் பெற்றுக் கொள்கின்றான்.

இரணியகசிபுவின் மகன் பிரகலாதன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே நாரதரினால் நாராயணனின் புகழ் உபதேசிக்கப்பட்டு நாராயணன் பக்தனாக வளர்ந்து வருகின்றான். பிரகலாதனின் நாராயணபக்தியை குரு சுக்கிராச்சாரியாராலும் மாற்ற முடியாமையினால் இரணியகசிபு விற்கும் மகன் பிரகலாதனுக்கும் முறுகல்நிலை தோன்றுகின்றது.

பிரகலாதனிடம் "நாராயணன் எங்கிருக்கின்றான் காட்டு" என்று இரணியகசிபு கர்ஜிக்க "அவர் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்" என மகன் சொல்ல, இரணியகசிபு தூணைக் காலால் உதைக்க சிங்கமுகமும் மனித உருவமும் கொண்ட நரசிம்மர் காலைக்கும் மாலைக்கும் நடு நேரமாகிய அந்திப் பொழுதில் தோன்றி இரணிய கசிபுவை அழிக்கின்றார். உலகம் அமைதியடைகின்றது.

தர்மம் வெல்லும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களால் கல்லூரியில் பல தடவைகள் மேடையேற்றப்பட்டது 2004 இல் நயினாதீவில் கலாசார விழாவுக்காக மேடை யேற்றப்பட்டது. கோயில் திருவிழாக்களிலும் தமிழ்த்தினப் போட்டிகளிலும் மேடை யேறியது.

வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து ஆகிய மெட்டுகக்ளில் கூத்துப்பாடல்கள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

கார் முகில் வண்ணா போற்றி
கலியுக வரதா போற்றி
பார் புகழ் மன்னா போற்றி
பத்து அவதாரா போற்றி
ஆர் கரம் நீட்டினாலும்
அண்ணலே அருள்வாய் போற்றி
காத்து ரட்சிக்கும் எங்கள்
கண்ணனே போற்றி போற்றி

## காட்சி 1

**பாடல்** **இராகம் : ஆனந்தபைரவி**

வாயில் காப்போர் நாமையா -வைகுந்த
வாயில் காப்போர் நாமையா
காவல் காப்போர் நாமையா -இந்த
வாயில் காப்போர் நாமையா -

மாயவன் பள்ளி கொள்ள அவர்
தூக்கம் கலைந்திடாமல்
வைகுந்த வாயிலிலே நாங்கள் - எம்
தெய்வத்தைக் காவல் செய்வோம்

**இந்த நேரத்தில் சனத்குமார முனிவர்கள் திருமாலைத் தரிசிக்க வைகுந்தத்திற்கு வருவர்**

**சனத்குமார்:** சனந்தனர் சனாதனர் சனத்குமாரர் சனகரும்
மாயனைத் துளபமணி மார்பு அழகனை
தூயனைத் துதித்து நற்தரிசனம் பெறுவதற்கு
நினைத்தனர் விரைந்தனர் வைகுந்தத்தை.
- அடைந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீம் திரிகிட தெய்யக்கம் தாம் தாம்
தீம் திரிகிட தெய்யக்கம் தாம்
தாம்தெய்யக்கம் தாம் (2)
தெய்யக்கம் தெய்யக்கம் தெய்யக்கம் தாம்

**முனிவர்களின் தவவலிமை தெரியாது காவல் சிறுவர்கள் தடுப்பர் கை நீட்டி மறிப்பர்.**

இராகம் : ஊரஊரப்பிரியா

காவலர்: நாராயணன் பள்ளி கொள்கிறார் - தரிசனம்
இப்போ கிடையாது
காரணன் அயர்ந்து தூங்கும் போது
ஒரு இடையூறும் ஆகாது

முனிவர்: மாமுனிவர் நாங்கள் நாரயாணனை
நாமுடன் பார்க்க வேண்டும்
பூவுலகில் நின்று ஆவலுடன் வந்தோம்
தடை சொல்லக் கூடாது
தாம் தக்கத்தீம் தக்கத்தெய் திரிகிட- (2)

காவலர்: எவ்வுலகில் நின்று வந்தாலும் இப்போது
பார்க்க முடியாது - மாயனை (2)
எள்ளளவும் இதில் மாற்றம் இருக்காது
சொல்வதும் தப்பாது. தாம் தக்க.....

**முனிவர்கள் கோபமாக**

இராகம் : அடானா

முனிவர்: கோபத்தை தூண்டிய காவலரே - கடுஞ்
சாபத்தை இப்போதே போடுகின்றோம்
பாவம் பழி ஒன்றும் பார்த்திடாமல் - அனு
தாபம் ஏதும் ஒன்றும் காட்டிடாமல்
மனித பிறப்பு கொண்டிடுவீர் இடர்
துன்பம் துயரம் அடைந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகில் பிறந்து துன்புறுவீர் - இனி
வைகுந்தன் பாதம் மறந்திடுவீர்

தாம் தரிகிட தெய்யக்கம் தாம் தாம் (2)
தெய்யக்கம் தாம் (4)

**காவலர்:** மாயவா ......... நாராயணா

**(நாராயணர் வரவு)**

இராகம் : மோகனம்

**முனிவர்** பூதலத்தை ஓரடியளந்த ரூபமான பொற்
பாத தாமரைச் சரண் பணிந்து பூசை
செய்வோம்
மாதவா கோவிந்த ஹரி கேசவா நாராயணா
நாத கீத வேதமந்திர ஓம் நமோ நாராயணா

**நாராயணன்:** நன்றே நடக்கட்டும் நன்மை கிடைக்கட்டும்
நாடு நலம் பெற்று ஓங்கட்டும்
இல்லை என்ற சொல்லு இல்லாது
போகட்டும்
எல்லோரும் இன்புற்று வாழட்டும்

**காவலர்:** சுவாமி நாங்களும் இன்புற்று வாழ வேண்டும்

இராகம் : நீலாம்பரி

**முனிவர்:** மாயவா கேசவா ராகவா வைகுந்தா-தங்களை
தரிசிக்க இவர்கள் தடை சொன்னார்
தடை சொன்ன காப்போரை சாபம்
போட்டுவிட்டோம்
மனிதப்பிறப்பாகி அலைந்து திரிக வென்று

**காவலர்:** பெரியோர் என்று உணராது
பெரும் பிழை செய்தோமே - மாயவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப விமோசனம் பெற்றிட ஓர் வழி
செய்வீரே....

அறியாது நாம் செய்த தவறினைப்
பொறுப்பீரே முனிவர்களே.....
நிலையாக வைகுந்தன் வாசலில் வாழ்ந்திட
அருள்வீரே.....

முனிவர்: 1. போட்ட சாபத்தை மீளப் பெற முடியாதப்பா
2. இருப்பினும் ஓர் வழி செய்யலாம்
3. நீங்கள் ஏழு ஜென்மங்கள் மானிடராகப் பிறந்து அவல வாழ்வில் உழன்று பின் மாயவன் பாதம் வந்தடையலாம்
4. இல்லாது போனால் மூன்று ஜென்மங்கள் மாயவனின் எதிரியாகப் பிறந்து அவரது கைகளினாலே அழிக்கப்பட்டு பின் வைகுந்தம் வந்தடையலாம்.
1. இதில் எது விருப்பமோ? அதில் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்

காவலர்1: இத்தனை ஜென்மங்கள் எம் இறைவனை நாம் பிரிந்திருக்க வேண்டுமா?

காவலர்2: மாயவா கேசவா நாராயணா இது என்ன சோதனை?

இராகம் : சுபபந்துவராளி

நாராயணர்: போட்டது சாபம் போட்டது தானப்பா
நீக்க முடியாதப்பா அதில்
இருப்பதோ இரு வழி ஒரு வழி ஏற்றிட்டு
எனை வந்து சேருமப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காவலர்:** நீண்ட காலம் மாயனைப் பிரிந்து
நாங்கள் வாழ மாட்டோம் - மூன்று
ஜென்மம் எடுத்து எதிரியாகி
உங்களை வந்தடைவோம்.

**நாராயணன்** எது நடந்ததோ? அது நன்றாய் நடந்தது
எது நடக்கிறதோ? அது நன்றாய் நடக்கிறது
எது நடக்குமோ ?அது நன்றாகவே நடக்கும்
உலக நியதி இது தான் படைப்பின்
சாரம்சமப்பா

**முனி 1:** எங்கும் எதிலும் எப்போதும் கீதை ஒலிக்கும்

**முனி2:** உலகோர் உலக நியதியை உணர்வதற்காக

**முனி3:** அடுத்த பயணத்திற்கு நேரம் கை கூடுகிறது
**முனி4:** சென்று வர விடை தர வேண்டும்

**நாராயணன்:** சென்று வாருங்கள் நன்மை உண்டாவதாக

இராகம் : சுபபந்துவராளி

**முனிவர்:** சனந்தனர் சனாதனர் சனக்குமாரர் சனகரும்
மாயனைத் துளபமணி மார்பு அழகனை
தூயனைத் துதித்து நற் தரிசனத்தைப்
பெற்றனர்
ஆகாய வழியாகப் பூலோகம் திரும்பினர்

**நாராயணர்:** காவலர்களே முதல் ஜென்மத்தை.... இரணியச் சகோதரர்களாக இக் கணமே எடுப்பீராக.

**காவலர்1:** சுவாமி உங்களுக்கு எதிரியாகி உங்களோடு போராடப்போகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காவலர்2:** விரைவாக எங்களை அழித்து ஆட் கொள்ள வேண்டும்

**காவலர்1:** விதி வழியே அது நடக்கும். நான் சென்று வருகிறேன்.

**வாயில் காப்போர் அசுரராக மாறுதல் சிரித்தல் அட்டகாசம் பண்ணுதல்**

## விருத்தம்

அண்ட சராசரம் கிடுகிடுக்க
ஆகாய வெளியெங்கும் இடிஇடியிடிக்க
எண்டிசையுமுள்ளவர்கள் நடு நடுங்க
ஏகாண்டம் எங்கணும் எதிரொலிக்க
கண்ட பேரண்டமும் படபடக்க
காடு மேடெல்லாம் கதி கலங்க
தண்டு கொண்டு அடிக்கத்
தரைபிழந்து கொப்பளிக்கத்
தோன்றினர் இரணியச் சோதரரே

**இரணியன் இரணியாட்சன் தோன்றுதல்**

**சபை வரவு** இராகம் : சஹானா

தத்துமி தகதிக தெய்யாதோம்
ததிங்கிணத்தோம்
தித் தெய்யா தகதிக தித்தித்தோம்
அண்ணன் தம்பி நாங்கள் வந்தோமே - வீரசூர
அண்ணன் தம்பி நாங்கள் வந்தோமே
இரண்யாட்சன் இரண்ய கசிபு
ஈடிணையற்ற வீரர்கள் நாங்கள்
இரண்டுபேரும் சேர்ந்து முழு
லோகத்தையும் ஆண்டிடுவோம் (அண்ணன்...)
தத்துமி தகதிக.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும் மேடும் எங்கள் கைகளில் -
சுழன்றடிக்கும்
சூறைக் காற்றும் எங்கள் கைகளில்
ஆழ்கடல் எங்கள் அடிமை -ஆர்த்தெழும்பும்
அலைகளும் எங்கள் குடிமை
தத்துமி தகதிக.....

**இரணியாட்சன்:**தம்பி

**இரணியகசிபு:** அண்ணா

இ.யா: இந்த லோகத்திலே பலமும் பராக்கிரமும் பொருந்தியவர்கள் என்றால் அது நானும் நீயும்தான்

இ.க: இந்த லோகமென்ன ஈரேழு பதினான்கு லோகத்திலும் எமக்கு இணையான பலசாலிகள் இல்லவே இல்லை

இ.யா: அப்படிச் சொல் அப்படிச்சொல் எங்கள் அறிவென்ன? ஆற்றல் என்ன?

இ.க: எங்கள் திறமை என்ன? பெருமை என்ன?

இ.யா: எம்மை வெல்ல யாராலும் முடியுமா?

இ.க எம்மை எதிர்க்க எவராலும் இயலுமோ?

இ.யா: தம்பி நான் தேவலோகம் சென்று அங்குள்ள வர்களை ஒரு கலக்கு கலக்கி விட்டு வருகிறேன்

இ.க நானும் இந்தப் பூலோகத்தைச் சுற்றி வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ளவர்களை எல்லாம் நசுக்கி விட்டு வருகிறேன்.

தத்துமி.......

**இருவரும் மேடையை விட்டு நீங்க வயோதிபர் இருவர் சந்தித்துக் கொள்வர் ஒருவர் மற்றவரை தடியால் எட்டித் தட்டுவார்**

**வயோ 1:** ஐயோ நான் இல்லை நான் இல்லை என்னை விடுங்கோ

**வயோ2:** டேய் நான் தான் என்னைத் தெரியேல்லையா ஏன் பயப்பிடுகிறீர்?

**வயோ1.** எட எட நீரோ நான் சும்மா பகிடிக்கு உம்மைக் கண்டவுடன் நடிச்சனான் எனக்கென்ன பயம் நான் வலு துணிச்சலானவன்.

**வயோ1:** எனக்கும் தான் பயம் என்டா என்னென்று தெரியாது இரணியன் வாறான்.

**வயோ2:** **நடுக்கத்துடன்**
எங்க? எங்க? உண்மையைத் தான் சொல்லுறன் எனக்கு இரணியன் எண்டா வாயாலும் வயித்தாலும் ஒன்றாப்போகும்

**வயோ1:** எனக்கும் தான் போட்டுது குளிச்சிட்டு வருவம்

**வயோ2:** ஓ.... வடிவா கழுவி குளிச்சிட்டு வருவோம் **(இரணியர் வரவு)** தத்துமி.......... 1

**இ ஆ** தேவலோகம் முழுவதும் என் கைகளில். இந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் வாயு வருணன் எல்லாம் மாயமாகிப்போய் விட்டார்கள் ....ஆ.....,ஆ (சிரிப்பு) யார் அவர்கள் என் குரல்கேட்டும் அலட்சியமாய் அடேய்.... அடேய்...... வாருங்கள் இங்கே.

வயோ2: சாமி கங்கைக்கு குளிக்கப் போகிறோம்.

இ.ஆ: கங்கை எங்கிருந்து பாய்கிறது.?

வயோ1: கங்கை சிவ பெருமானின் சடாமுடியில் இருந்து பாய்கிறது.

இ.ஆ: இல்லை கங்கை என் காலில் இருந்து பாய்கிறது தெரிகிறதா?

வயோ2: தெரிகிறது தெரிகிறது.

இ.ஆ: சுழன்றடிக்கும் காற்று எங்கிருந்து வீசுகிறது?

வயோ1: தெரியாது என்று சொல்லு.

வயோ2: தெரியாது.

இ.ஆ: சுழன்றடிக்கும் காற்று என் மூக்கிலிருந்து.... புரிகிறதா?

வயோ1: புரிகிறது புரிகிறது.

இ.ஆ: சரி மழை எங்கிருந்து பொழிகிறது.

வயோ2: உங்கள் வாயிலில் இருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோ1: உங்கள் நாக்கிலிருந்து.

வயோ2: வயிற்றிலிருந்து.

இ.ஆ: இல்லை மழை வானத்திலிருந்து பொழிகிறது ஏனென்றால் அந்த வானம் எனது தலையில் இருக்கிறது ஆக நானே கடவுள்.

வயோ 1: சுவாமி ஸ்ரீமத் நாராயணன் தான் எமக்கெல்லாம் கடவுள் அவரை நீங்கள் வெல்வீர்களாயின் நீங்கள் தான் கடவுள்.

இ.ஆ: யாரந்த ஸ்ரீமத் நாராயணன் என்னை விடப் பெரியவனோ? அவனை எனக்கு காட்டித் தாருங்கள் கடித்து குதறிவிடுகிறேன். பேசும் இடமெல்லாம் என் பெயர். பறக்கும் இட மெல்லாம் என் கொடி கேட்கும் இடமெல்லாம் என் ஒலி. நாராயணண்.... பார்கிறேன் ஒரு கை. தத்துமி தகதிக..........

இராகம் : கல்யாணி

**நாரதர் வரவு**

நாரதமா முனிவர் நானும்
நாராயணன் அருளுடனே
நாடு நகரம் சுற்றி வந்து
நல்ல காரியம் செய்திடுவேன்
ஓம் நமோ நாராயணாய

**இரணிய கசிபு வரவு**

இ.க: நாராயணன் யாரவன்?

இராகம் : சங்கராபரணம்

என்னைவிடப் பெரியவனோ? -நாரயணன்
என்னைவிடப் பெரியவனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரென்ற மன்னரெல்லாம்.
என்னைத் துதித்து ஏவல் செய்ய
என்னை விடப் பெரியவனோ?

நாரதர்: உம்மை விடப் பெரியவர் தான் நாராயணன்
உம்மை விடப் பெரியவர் தான்
கண்ணை இமை காப்பது போல்
எம்மை எல்லாம் காக்கும் அவர்
உம்மை விடப் பெரியவர் தான் நாராயணன்
உம்மை விடப் பெரியவர் தான்

இ.க: எங்கை அவன் இருக்கின்றான்
எந்தன் முன்னால் வரச்சொல்லும்
சிங்கமாக சீறிக்கொண்டு
சின்னா பின்னப் படுத்தேனோ?
என்னை விடப் பெரியவனோ........

நாரதர்: சங்கு சக்கரம் தாங்கும் நாதன்
சிங்கத்தையும் சங்கரிப்பார்
பொங்குகடல் மேலே பள்ளி
கொள்ளுகின்ற எங்கள் நாதன்
உமை விடப் பெரியவர் தான்....

இ.க: அவரை அழித்திட வழி ஒன்று சொல்லும்
அது தப்பின் உன் தலை நில்லாது பாரும்
என்னை விடப் பெரியவனோ நாராயணன்
என்னை விடப் பெரியவனோ.

இ.க: நாரதரே உன் நாராயணன் எனது கால் பிடித்து சேவகம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: அப்படியா? நல்லது நல்லது.

இ.க: அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ?

நாரதர்: அதற்கு... அதற்கு நிறையப் பலம் வேண்டுமப்பா.

இ.க: அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ?

நாரதர்: பிரம்மனை நோக்கி கடும் தவம் செய் உனது நோக்கம் சிலசமயம் நிறை வேறக்கூடும்

இ.க: பிரம்மன்... அவன் எங்கே இருக்கின்றான்?

நாரதர்: கடும் தவம் செய் அவன் உன்னிடம் ஓடி வருவான்

இ.க: அப்படியா கடும் தவம் செய்வேன். சாகா வரம் பெறுவேன்.... கடும் தவம் செய்வேன் சாகா வரம் பெறுவேன்.....

## காட்சி–3

**சில மாதங்கள் ஓடி மறைகிறது**

**இரணிய கசிபுவின் மனைவியும் தோழியர்களும் வருகை**

இராகம் : கமாஸ்

ராணி:
கானகம் மீதிலே அழகானதோர் குடில்
கட்டிடுவோம் தோழியர் ஓடி வாருங்கடி

தோழி:
எங்களின் பட்டத்து ராணி வயிற்றிலே
பாலன் வளர்கிறான் பாட்டுப்பாடுங்கடி
இரணிய கசிபுவின் இணையில்லா மனைவிக்கு
ஆரணியத்திலோர் அழகான குடில் செய்வோம்
இயற்கையின் சூழலில் இன்புற்றிருக்கவே
எல்லோரும் சேர்ந்தாடிப் பாடி மகிழ்வோமே
(தாம்தக்க......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராணி:** அதோ அந்த அருவி ஓடும் அழகை பார்த்தீர்களா?

**தோழி:** உங்களைக் கண்டு மயில்கள் எல்லாம் தோகை விரித்தாடுகின்றன.

**ராணி:** அதோ மான் குட்டிகள் துள்ளித் துள்ளி. ஓடுகின்றன. என்ன அழகு!

(மான்குட்டிகளைப் பார்த்து)

வாருங்கள் என் அருகில் வாருங்கள்

**நாரதர்:** ஓம் நமோ நாராயணாய

**தோழி:** தூரத்தில் நாரதமா முனிவர் வந்து கொண்டிருக் கின்றார் போல் தெரிகிறது

**ராணி:** அப்படியா? அவரை அழைத்து வாருங்கள் வணங்கி ஆசீர் வாதம் பெறுவோம்

**நாரதர்:** ஓம் நமோ நாராயணா..... ஓ....! இரணியகசிபுவின் மனைவி...... கணவன் கானகத்திலே கடும் தவம் புரிகின்றான். நீயும் கர்ப்பவதியாகிக் கானகத்திலே இருக்கிறாய் நன்மை உண்டாவதாக.

**ராணி:** மாமுனிவரே அந்தப் பரந்தாமனின் வரலாற்றை எனக்கும் சொல்லிச் தாருங்களேன்.

**நாரதர்:** ஓம் தாராளமாக....

இராகம் : கல்யாணி

ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி கதையைக் கேட்டபடி கண்ணயர்வாள்

நாரதர்: ஓ..... தூக்கம் தழுவிக் கொண்டதோ? நான் வருகிறேன் அம்மா

ராணியின் வயிற்றிலிருந்து குழந்தை பேசும்

குழந்தை: ஏன் நிறுத்தி விட்டீர்கள் நான் விழித்திருக்கிறேன் எனக்குச் சொல்லித் தாருங்கள்.

நாரதர்: என்னே மகிமை! மகாராணியின் வயிற்றிலிருந்து குழந்தை பேசுகிறது.

ராணி சரியடா கண்ணா நான் சொல்லித் தருகின்றேன்

இராகம் : கல்யாணி

ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய

நாரதர் மேடையிலிருந்து நீங்குவார்

தோழி: அம்மா வாருங்கள் உள்ளே சென்று உறங்கலாம்

இரணியகசிபு வரவு

தத்துமி தகதிக தெய்யாதோம்.

இ.க: சாகா வரம் பெற்று விட்டேன் ...
சாகா வரம் பெற்று விட்டேன்....
இனி அந்த ஸ்ரீ மத் நாராயண மூர்த்தியை ஆட்டிப் படைக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி பிரகலாதன் வரவு

இராகம் : ஆனந்தபைரவி

பட்டத்து ராணி தன் பெற்ற மகனுடன்
இட்டமாய் மன்னனவன் முன்னே வந்தாளே
பிரகலாதனும் ஒய்யாரமாகவே
தந்தையைக் கண்டிட ஓடி வந்தானே
நீண்ட தவம் செய்து சாகா வரம் பெற்றேன்
மைந்தனைக் கண்டு மகிழ்வு கொண்டானே

இராகம் : சாமா

ராணி: நாதா எங்கள் மைந்தனுக்கு ஐந்து வயது
நிரம்பி முடிந்த தினால் - தோதாய்
நற்கலைகள் பயின்றிட குருவிடம்
மகனை அழைத்துச் செல்வோம்

இ.க: சகல கலைகளும் கற்றுத் தேர்ந்திட
குருகுலம் தேடிச் செல்வோம் - எங்கள்
பிரகலாதன் முழு லோகத்தை ஆண்டிட
நல்ல வழி செய்வோம்.

## காட்சி – 4

சுக்கிராச்சாரியார் குருகுலம்

இராகம் : சாமா

சுக்கி: அசுரகுலத்திற்கு கல்விகலைகளை
சொல்லித் தருகின்ற உபாத்தியார் நானே
சுக்கிராச்சாரியார் என்று பெயர் கொண்ட
வக்கிரப் போர்த் தொழில் வாத்தியார் நானே

இரணியகசிபு, ராணி, பிரகலாதன் குருகுலம் வருகை

இராகம் : சாமா

சீடன்: அந்தா இரணியன் குடும்பத்தோட வாறன்
குருவிடம் சொல்லுவம் வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : சாமா

சுக்கி: அசுர குலத்திற்கு அரசனே வாடா
சகல கலைகளும் கற்போமே வாடா
எங்களின் ஆண்டவர் உன் தந்தை ஆதலால்
ரண்யாய நம என முதல் சொல்லடா
தாம்தக்க தீம்....

பிர: ஓம் நமோ நாராயண ஹரி ஓம் நமோ
ஓம் நமோ நாராயண ஹரி ஓம் நமோ

சுக்கி குழந்தாய் நான் சொல்வதை நன்றாகக் கேட்டுவிட்டு திருப்பிச் சொல்

ரண்யாய நம....... ரண்யாய நம.......
ரண்யாய நம....... ரண்யாய நம.......

பிர: ஓம் நமோ நாராயணய ஹரி ஓம் நமோ
ஓம் நமோ நாராயணய ஹரி ஓம் நமோ

இ.க: **கோபத்துடன்**
அடேய் பிரகலதா

ராணி: மகனே

சுக்கி: சற்றுப் பொறுங்கள் குழந்தை சின்னவன் தானே
ரண்யாய நம....... ரண்யாய நம.......
ரண்யாய நம....... ரண்யாய நம......

பிர: ஓம் நமோ நாராயண ஹரி........ஓம் நமோ
ஓம் நமோ நாராயண ஹரி........ஓம் நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : சாமா

சுக்கி: தப்பு தப்பு உது தப்பப்பா- நான்
சொல்வதை திருப்பி சொல்லப்பா
ரண்யாய நம....... ரண்யாய நம......
ரண்யாய நம....... ரண்யாய நம......

பிர: தப்பு உது தப்பு குருதேவா - நான்
சொல்வதே மெத்தச் சரிதேவா
ஓம் நமோ நாராயண ஹரி........ஓம் நமோ
ஓம் நமோ நாராயண ஹரி........ஓம் நமோ

இ.க: அடேய் பிரகலாதா... நாராயணனை விட நானே பெரியவன் புரிந்துகொள்.

**இரணியகசிபு பிரகலாதனை கதாயுதத்தால் அடிக்க முயற்சிக்க சுக்ராச்சாரியார் தடுப்பார்.**

இராகம் : சாமா

சுக்கி: ஒன்றுமறியாத பச்சை பாலகனை
அடிக்கக் கூடாது வெருட்டக் கூடாது
நன்றாய் நான் பாடம் படிப்பித்தனுப்புவேன்
சென்று வருகவே சென்று வருகவே
தாம் தக்க தீம் தக்க

சுக்கி: பிரகலாதா நான் சொல்வதைச் சொல் இல்லாவிட்டால் எனக்கு கெட்ட கோபம் வந்து விடும்

ரண்யாய நம....... ரண்யாய நம.......
ரண்யாய நம....... ரண்யாய நம.......

இராகம் : கல்யாணி

பிர: சகல புவனங்களுக்கும் நாயகன்
நாரயணன் அல்லவா - கேவலம்
என் தந்தை வெறுமையான
அசுரப் பிறப்பு அல்லவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு: சகல புவனங்களுக்கும் நாயகன்
நாராயணன் அல்லடா
சகாவரம் பெற்ற உன் தந்தை
எல்லோருக்கும் கடவுளடா

குரு அடேய் பிரகலாதா தந்தை சொல்லைத் தட்டக் கூடாது என்று சாத்திரங்கள் சொல்லவில்லையா? ஏன் இப்படி பிடிவாதமாக இருக்கிறாய்? தவறி நடக்கிறாய்.

பிர: குருவே நீங்கள் சொல்வதும் சரிதான் எனினும் ஒருவன் அஞ்ஞானியாய் இருக்கும் வரை சரீர சம்பந்தத்தால் உண்டான தந்தை அவனுக்கு பிதாவாக இருப்பார். அவன் ஞானியாகி விட்டால் அவனுக்குத் தந்தை பரம்பிரமமல்லவா?

இராகம் : சாமா

சுக்கி: தப்பு தப்பு உன்னைப் படிப்பிக்க வந்தது
தலை சுத்துதப்பா என் தலை போகுமப்பா
பக்குவமாக நான் சொல்லுற பாடத்தை
அக்குவேறாணிவேறாக நீ சொல்லப்பா

இப்போ நான் களைத்து விட்டேன். நாளை பாடம் தொடரும் உன் வேலைகளை நீ செய் போ....

## காட்சி 5

பூமாதேவி வரவு

இராகம் : சிந்துபைரவி

பூமியின் பாரம் தாங்க முடியல்லே
மாயனே எங்க சென்றாய் - பூமா
தேவி நானும் பொங்கி அழுகிறேன்
இங்குடன் வந்திடப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்களின் அட்டகாசம் கட்டுப்பாட்டை மீறுதே
மக்கள் துன்பப்படுவதை கண் கொண்டு
பார்த்திட என்னால் முடியாதப்பா

நாரதர்: வந்துகொண்டு பூமாதேவி பூமியின் பாரம் தாங்க முடியாமல் நீ படும் அவஸ்தை தெரிகிறது. இரணியர்கள் சகல புவனங்களையுமல்லவா ஆட்டிப்படைக்கிறார்கள்.

பூமா: அவர்களை அழிக்க வேண்டிய நாராயண மூர்த்தி என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

நாராயணன்: பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

பூமா: ஒளித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுங்கள்

நாராயணன்: ஒளிக்காமல் இருக்க முடியுமா? ஒருவன் சாகா வரம் பெற்று விட்டான். மற்றவன் சண்டித்தனம் பண்ணுகிறான். ஒளிக்காமல் இருக்க முடியுமா.?

பூமா: அவர்களால் நான் துன்பப்படுவது உங்களுக்கு மகிழ்ச்சிதானே

இராகம் : சிந்துபைரவி

நாராயணன்:
காலம் நேரம் கை கூடும் போது
கடமையை முடிப்பேன் - விதியின்
கோலம் சேர்ந்து வரும் போது
அசுரரை அழிப்பேன்.

பூமா:
அவலப் படும் மக்களுக்கு ஆறுதல் தாரும்
இந்த இரணியச் சகோதரருக்கு
அழிவினைத் தாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணன்: விதி வழியே கதை நடக்கும்
கோபத்தை தீரும்
அவர்க்கு அழிவு வரும் காலம்
மிக அருகினில்பாரும்

நாரதர்: இரண்யாட்சன் வந்து கொண்டிருக்கிறான்.

இராகம் : சிந்துபைரவி

நாராயணன்: நானும் ஓடித் தப்ப வேண்டும்
விதியும் அப்படி
நீரும் ஒளித் தோட வேண்டும்
நியதி அப்படி

பூமா: இந்தப் பூமிப்பாரத்துடன் நான் எங்கு சென்று ஒளிப்பது

இராகம் : சிந்துபைரவி

நாராயணன்: காலம் நேரம் கை கூடும் போது
கடமையை முடிப்பேன்
விதியின் கோலம் சேர்ந்து வரும் போது
அசுரரை அழிப்பேன்

பூமா: நாராயணா நீ நல்லா ஓடுவாயப்பா எனக்கு கையும் ஓடலை காலும் ஓடல்லை நாராயணா....

**தத்துமி தகதிக தைய்யா.............**

வயோ1: அந்தா நாரதர் ஓடுற ஓட்டத்தைப் பார்

வயோ 2: பயம் ஆரை விட்டது

வயோ1: ஒருத்தரையாவது காட்டிக் கொடுக்கா விட்டால் நான் செத்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோ 2: அதுக்காக நாரதரை காட்டிக் கொடுக்கப் போகிறாயா?

வயோ1: ஆம் ஆம்

வயோ 2: துரோகம் துரோகம்

வயோ 1: எனக்குத் துணை வராவிட்டால் உன்னையும் காட்டிக் கொடுப்பன்

வயோ 2: உன்னோட சேர்ந்தன் அழிஞ்சன்

**இரண்யாட்சன் வரவு**

தத்துமி தகதிக......

இராகம் : யமிகல்யாணி

வயோ2: கண்டோம் நாங்கள் கண்டோம்
தங்களை அழிக்க சதி செய்யும்
எதிரிகள் கூட்டத்தைகண்டோம்
நாங்கள் கண்டோம்

வயோ 1: மலையொத்த தோழினன்
கடலொத்த நிறத்தினன்
திடம் கொண்ட வீரன் போல்
தோன்றுகின்றானையா.... கண்டோம்

இ.ஆ: முடியுமோ? வெல்ல முடியுமோ? - இந்த
பலம் மிக்க உரம் பெற்ற கரம்
கொண்ட இரண்யாட்சனை முடியுமோ
வெல்ல முடியுமோ?

இ.ஆ: எங்கே இருக்கிறான் யாரவன்?

வயோ1: அதோ தம்புராவும் கையுமாக ஓடுகிறாரே....
அவர் தான் பிடியுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோ2: அவர் அவரை காட்டித்தருவார்

**இரணியாட்சன் நாரதரை துரத்திச் செல்லல்**

தத்துமி தக.....

நாரதர்: இனி என்னால் ஓட ஏலாது

**விருத்தம்**

மாயவா மாயவா நாராயணா
ஓடி நீ வாராயப்பா
இரணயாட்சன் துரத்துறானே
என்னை வந்து வெருட்டுறானே
காரணா ஓடிடி வாடா
காத்து எமை ரட்சியப்பா

இ.ஆ: காத்து ரட்சிக்க நான் இருக்க யாரவன் நாராயணன்?

நாரதர்: **(இரகசியமாக)** நாராயணனை மோத வைக்க இது தான் நல்ல சந்தர்ப்பம். இரணியா ....

இ.ஆ: யாரவன் நாராயணன்?

நாரதர்: நீ தேடும் நாராயணனை பிடிக்க நான் ஒரு வழி சொல்கிறேன்.

இ.ஆ: சொல்லும் சொல்லும்.

நாதரர்: அதோ பூமியை சுமந்து கொண்டிருக்கின்றாளே பூமாதேவி. அவள் கையில் சுமந்துகொண்டிருக்கும் பூமியை கவர்ந்து சென்று விடு. நாராயணன்தேடி வருவான். பிடி... அடி... கடி ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.ஆ: ஆ....... பூமாதேவி பூமியைச் சுமக்கிறாயா? வா இங்கே... வா இங்கே ....

**விருத்தம்**

பூமா: பலம்மிகப் பெற்ற இரண்யாட்சனே
நீயும் கேளாய்
பூலோகம் சுமப்பவள் நான் பூமாதேவி
எந்தனின் பெயர்
எந்தனின் கடமையில் நீ இடையூறு
செய்திடாதே

இ.ஆ: இடையூறு செய்தால் ......

பூமா: அழிந்து நீ போவாயப்பா அடிபட்டுச் சாவாயப்பா

இ.ஆ: என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்?

பூமா: அழிந்து நீ போவாயப்பா அடிபட்டுச் சாவாயப்பா

இ.ஆ: சாவா? எனக்கா? பெண்ணே நீ சுமந்து கொண்டிருக்கும் பூமியை பறித்துக் கொண்டு பாதாளலோகம் சென்று விடுகிறேன். வரட்டும் நாராயணன் அங்கு வைத்து ஒரு கை பார்த்து விடுகிறேன்.
தத்துமி தகதிக.......
**பூமியைப் பறித்துச் செல்லுதல்**

இராகம் : பீம்பிளாஸ்

பூமா: மாலே மணி வண்ணனே பூமியை
காலால் அளந்தவனே - இரணியாட்சன்
பூலோகம் கொண்டான்
மாலே மணி வண்ணனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்காலம் பூண்டு வந்து
அசுரனைக்கொன்று விட்டு
பாதாள லோகத்திலிருந்து
பூமியை மீட்டுத்தாப்பா

நாராயணன் போர்க்கோலத்தோடு தோன்றுவார்

இராகம் : தோடி

நாராயணன்: எப்படி பொறுப்பனோடா அடடா
எப்படிப் பொறுப்பனோடா
இப்படித் தவறு செய்த செப்படி
வித்தைக்காரனை
எப்படிப் பொறுப்பனோடா

நாரதர்: ஓடி வந்து நாராயணா இது என்ன வராக ரூபத்துடன்

நாராயணன்: நாரதரே பூமியை பாயாக சுருட்டிக் கொண்டு பாதள லோகம் சென்று ஒளித்து விட்டான் இரணியாட்சன். நான் சென்று அவனை வென்று பூமியை மீட்டு வரும் வரை இந்த சமுத்திர நீரைப் பானம் பண்ணி வைத்திருக்க வேண்டும்.

இராகம் : கமாஸ்

நாரதர்: சமுத்திரா தேவியே எந்தனின் வாயிலே
பவுத்திரமாய் வந்து பானமாய் ஆயிடு
பாதாள லோகத்தில் பாவியைக் கொன்றிட்டுப்
பூலோகம் மீட்டிட வந்து உதவிடு
தாயே சமுத்திரா தேவியே அம்மா
மாயவன் மக்களை காத்திடரட்சியும்
பாயாய் சுருட்டிய பூமியை மீட்டிட
வாயளவாகி என் கைகளில் வந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர் இதோ சமுத்திரா தேவி என் கைகளில் வந்து அமர்ந்து விட்டாள் தாங்கள் சென்று வென்று பூமியை மீட்டு வரும் வரை சமுத்திரநீரைப் பானமாக என் வாயில் வைத்திருக்கின்றேன்.

## காட்சி 6

(இரணியாட்சனும் நாராயணனும் யுத்தக்காட்சி

இராகம் : தோடி

இ.ஆ: என்ன துணிச்சலோடா? அடடா
என்ன துணிச்சலோடா ?
என்னைத் தேடி பாதாள
லோகம் மட்டும் வந்துவிட
என்ன துணிச்சலோடா

நாராயணன்: எப்படிப் பொறுப்பனோடா? அடடா
எப்படிப் பொறுப்பனோடா?
இப்படித் தவறு செய்த
செப்படி வித்தைக்காரனை
எப்படிப் பொறுப்பேனோடா?
தாம் தக்க தீம் தெய்

யுத்தமுடிவில் இரணியாட்சன் கொல்லப்படுவான்
நாராயணன் பூமாதேவியிடம் பூமியைக் கையளிப்பர்

இராகம் : கல்யாணி

பூமா: ஆணவம் அழிந்தது இரண்யன் உயிர் போனது
ஆண்டவன் அருளினாலே பூலோகம் மீண்டது

நாரதர்: பொங்கிவரும் ஆழ்கடலே
பொட்டளவை விட்டு நீங்கி
தங்கு தடை இல்லாத
கடலாக மாறிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 7

**சுக்கிராச்சாரியார் குருகுலம்**

**சுக்கி:** பிரகலாதா உனக்கு ஞானம் முத்திப் போச்சு நாராயணன் பித்துப் பிடிச்சுப் போச்சு உன்னைத் திருத்தவே இயலாது நான் சொல்வதைச் சொல்

ஓம் நமோ நாராயணாய....
ஓம் நமோ நாராயணாய....
ஓம் நமோ நாராயணாய....
ஓம் நமோ நாராயணாய....

ஐயையோ என்னையும் மாத்திப்புட்டானே என் தொழிலுக்கே உலை வச்சிடுவான் போல் இருக்கே அதோ உன் தாய் தந்தையர் வருகின்றனர் நல்ல படியாய் நடந்து கொள் நான் வருகின்றேன்

**இராகம் : சாமா**

தப்பு தப்பு உன்னைப்படிப்பிக்க வந்தது
தலைசுத்துதப்பா என் தலை போகுமப்பா

**சுக்கிராச் சாரியார் மேடையைவிட்ட நீங்க இரணிய கசிபும் ராணியும் வருவர்**

**இ.க:** மகனே பிரகலாதா பள்ளியில் என்ன கற்றுக் கொண்டாய்?

**பிரகலாதன்:** தந்தையே ஓம் நமோ நாராயணா என்ற தாரக மந்திரத்தை தவிர கற்பதற்கு வேறு என்ன இருக்கிறது?

**இரணியகசிபு கோபத்துடன் பிரகலாதனை தள்ளி விடுதல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : சங்கராபரணம்

இ.க: உன் மகனுக்கு நற் புத்தி சொல் - என்
புகழையும் திறனையும் எடுத்துச் சொல்.

ராணி: மகனே பிரகலாதா வாடா - உன்
தந்தையே உலகத்தின் இறையடா
அவரை வணங்கியதன் பின் பாடம்
படிப்பது எங்கள் முறையடா.

பிரகலாதன்: சர்வலோக ரட்சகன் நாராயணன்
அவரை விடத் தந்தை மேம்பட்டவரோ?
ஓம் நமோ நாராயண ஹரி ஓம் நமோ
ஓம் நமோ நாராயண ஹரி ஓம் நமோ.

இ.க: பிரகலாதா உன்னை வருத்தியாவது என் நாமம் சொல்ல வைப்பன் **(கைகளைத் தட்டி)** அடேய் பிடார, கிடார, தடார, முடாறங்களே..... இவனைச் சித்திரவதை செய்யுங்கள்..... என் நாமம் சொல்லும் வரை இவனைச் சித்திரவதை செய்யுங்கள் ......

**நான்கு பயங்கரமான உருவங்கள் தோன்றும்**

**தாச்தொணாங்கிட ததிங்கத் தத்துமி**

**எனும் தாளக்கட்டுக்கு ஆடி அசைந்து சித்திரவதை செய்வதாக காட்சி அமையும் இறுதியில் சோர்ந்து பின்வாங்க**

**இரணியகசிபு வருகை**

இ.க: அடேய் பிரகலாதா தேவர்களும் முனிவர்களும் என்னைத் துதித்து ஏவல் செய்ய நீ கூறும் நாராயணன் எப்படி மேலானவனாகி விட முடியும்? சரி எங்கே உன் நாராயணன் இருக்கிறான்? காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை. பார்க்கிறேன் ஒரு கை.

பிர: அவர் தூணிலும் இருப்பார்..... துரும்பிலும் இருப்பார்.... என் நாவிலும் இருப்பார்..... என் நாராயணன்.

இ.க: இந்த தூணில் இருப்பானோ?

பிர: ஆம்

**இரணியகசிபு தூணை காலால் உதைய நாராயணன் நரசிம வடிவத்தில் தோன்றி இரணிய கசிபுவை வதம் செய்வார்.**

**ஓம் நமோ நாராயணாய என்ற இசை ஒலிக்க வதம் இடம் பெறும் நடிகர்கள் எல்லோரும் மேடையில் தோன்றுவர் மங்களம் பாடுவதுடன் நாடகம் நிறைவுறும்**

மங்களமாம் மங்களமாம் எங்கள்
சபையோருக்கு மங்களமாம்
வாழ்த்துக்கள் சொல்லிடுவோம் - எல்லோரும்
வளமுடன் வாழ்க என்போம்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யாய்ப் பழங்கதையாய்

20.10.2001 N.I.P.U நிறுவனம் நடாத்திய 17 தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் தமிழ் மொழிப்பிரிவில் முதலிடம் பெற்றதுடன் ஐந்து சிறப்பு விருதுகளையும் பெற்றுக் கொண்டது.

**திரை விலகும் போது....**

மிகத்தொலைவில் இருந்து எழும் சோக இசையொன்று மெள்ள மெள்ள ஓங்கி ஒலிக்கும். மேடையின் மத்திய பகுதியில் ஒரு அழகிய பெண் தலைவிரி கோலமாக பூவிழந்து பொட்டிழந்து பொலிவற்றுக் காட்சியளிப்பாள். அவளது சேலை நுனியைப் பற்றிப் பிடித்தவாறு மேடையின் பின் மத்தியில் ஒரு உயரமான தளத்தில் கோரமான ஒருவன் நிற்பான். இடது மத்தி, முன்இடம், முன்வலம் ஆகிய பகுதிகளில் சிலர் தமது கருமமே கண்ணாயிருப்பர். அனைவரும் உறை நிலையிலேயே இருப்பர். சோக இசை மௌனிக்க மேடையில் உள்ளவர்கள் அசையலாம். தலைவிரி கோலமாய் நிற்கும் பெண்ணை அன்னை என அழைப்போம்.

அன்னை : ஆடைகுலைவுற்று நிற்கிறேன் - நான்
ஆவென்று அழுது துடிக்கின்றேன் - என்
மைக்குழல் பற்றி இழுக்கிறான் இப்
பீடையை நோக்கிட யாருளர்.

கோர முகத்தோன் தன் கோரத்தனத்தைக் காட்டுவான்
சூழ இருந்தவர்களிலும் ஒரு சல சலப்புக் காணப்படும்.
முன் இடத்திலிருந்து ஒருவர் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் அம்மா நாமுள்ளோம்.

ஒருவர் (2) நன்றே செய்வோம்

ஒருவர் (3) பணி செய்வோம்

**இக்குரல்கள் அழுகையாய், கோபமாய், வீரமாய் மேலெழும் இப்போது சூழவிருந்தோர் ஒன்றாகி, பின் இரு முனையாக நின்று கோரமுகத்தோனிடமிருந்து அன்னையின் சேலையைப் பறித்தெடுப்பர். கோரமுகத்தோன் அன்னையை விட்டு விலகிச் செல்வான். சூழவுள்ளோர் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆடிப்பாடலாம்.**

**பாடி ஆடும் போது அலங்காரப் பொருட்கள் பூமாலைகள் கொண்டு அன்னையை அழகு படுத்துவர்.**

பாடல்:

பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
புள்ளினம் ஆர்த்தன
ஆர்த்தன முரசம்
வெள்ளிய சங்கம்
முழங்கின கேளாய்
அள்ளிய தெள்ளமுதன்னை எம் அன்னை
ஆருயிரே பள்ளி எழுந்தருளாயே...
பரிதியின் பேரொளி
வானிடைக் கண்டோம்
பார்மிசை நின்னொளி
காணுதற் கலைந்தோம்
சுருதிகள் பயந்தன
சாத்திரம் கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லரு மாண்பின
ஈன்றனை அம்மே
இதமுறவந்தெமை ஆண்டருள் செய்வாய்
ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே

**பாடல் முடிவடைய அன்னை அழகு பொருந்திய ஒரு நங்கையாக ஜொலிக்கக் கூடும்.**

**இப்பொழுது முன் வலதில் இருந்து எழுந்த ஒருவர்**

**ஒருவர்:** இவ எங்கடை அம்மா

**முன் இடதில் இருந்து எழுந்த இன்னொருவர்**

**ஒருவர்:** ஓம் எங்கடை எல்லாவற்றையும் அம்மா

**ஒருவர்:** இல்லை இவ எங்கடை அம்மா

**ஒருவர்:** ஓம் ஓம் இவ எங்கடை எல்லாவற்றையும் அம்மா

**ஒருவர்:** இல்லை இவ எங்கடை மட்டும் அம்மா

**ஒருவர்:** அப்ப நாங்கள?

**ஒருவர்:** வந்தார் வரத்தார்

**ஒருவர்:** என்ன? வாயைக் கிழிச்சுப் போடுவம்

**ஒருவர்:** பாப்பம்

**ஒருவர்:** எங்கடை தான் காஞ்சிபுரம்

**ஒருவர்:** கனகாம்பரம் எங்கடை

**ஒருவர்:** கால் கை எல்லாம் எங்கடை

**ஒருவர்:** ஆ... அப்பிடியோ?... தலை எங்கடை

**ஒருவர்:** தலைக்கனம் கூடுது.

**மெள்ள மெள்ள மேடையில் இரு குழுக்கள் தோன்றி விவாதத்தில் ஈடுபடுவார். அது ஒரு சண்டைக்குரிய ஏது நிலையைத் தோற்று விக்கக் கூடும். இதுவரை அமைதியாக அவலப்பட்டுக் கொண்டிருந்த அன்னை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை: என் குழந்தைகளே ஏன் வாதங்கள்?
நீங்கள் இருவீரும் என் கண்கள் அல்லவா...
சண்டையால் சச்சரவால் என்னை அலங்
கோலப்படுத்தி விடாதீர்கள்.

-இரு குழுவினரும் பெரிய அசைவுகளுடன் மௌன மொழியில் பேசிக் கொண்டிருக்க ஆடல் பாடலுடன் பெரியவர் ஒருவரைச் சுமந்தவாறு இருவர் மேடையை நோக்கி வந்து கொண்டிருப்பர். வரவு பார்வையாளர் பகுதிக்குள்ளாலும் நிகழலாம்:

மெத்தப் பெரிய சண்டியன் வாறார்
மனிதரை வதைத்து
சும்மா கிடந்த சங்கினை ஊதி
சோலிகள் வளர்த்து

கோரமுகத்தோனின் அதே தளத்தில் பெரியவர் வந்து இறங்குவார். குழுவிலிருந்தோர் ஆவல் பீதியால் ஆனந்தம் கொள்ளக்கூடும். பெரியவர் கைகளைப் பெரிதாக அசைத்தபடி

பெரியார்: நீவிர் அமைதி பெறுக
யாமிருக்கப் பயமேன்?

அன்னை: மீண்டும் வேதாளம்

பெரியார்: வேம்பிலே ஏறிக்கொண்டது

சுமந்து வந்து இருவரும் பெரியவர் அருகில் சென்று ஆசிபெற்றுக் கொள்வர்.

பெரியவர்: இனி எல்லோரும் சாந்தியடையலாம்
ஆத்ம சாந்தியடையலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சாந்தியடையலாம்

**பெரியவர் தன் வில்லை வளைத்து அம்பு எய்வதற்காக எல்லா இடமும் குறிப்பார்ப்பார். இப்போ குறி இரு குழுக்களிடமும் இருக்கும். பெரியவரின் வலது புறத்தில் நிற்பவர் முன் இடது பகுதியில் இருக்கும் குழுவிடம் சென்று ஒருவரை அழைத்து, ஏதோ ரகசியம் சொல்லி சிறு பொதியையும் கொடுப்பார்.**

**பெரிய குழுவில் ஒருவர் –**

**ஒருவர் :** தங்கை சூர்ப்பனகையின் அங்க அவயங்களை வெட்டி எறிந்து விட்டார்களாம்.

**இரண்டு மூன்று தடவை இதைத் திரும்பத் திரும்பச் சொல்ல பெரிய குழுவினர் ஆரவாரப்பட முன் வலதில் உள்ள சிறு குழுவினர் புழுப்போல் நெளியக்கூடும்.**

**அன்னை:** மீண்டும் என்னை அடிமை செய்யாதீர்கள் அமைதியைக் கெடுக்காதீர்கள்.

**ஒருவர்:** இது முதற் கட்டம் இனி முழுக்கத் தொடரும்

**பெரியார்:** சாந்தியடைவீர்களாக... சாந்தியடைவீர்களாக யாமிருக்கப் பயமேன்?

**பெரியவர் தன் வலப்புறம் இருப்பவருக்குக் கண்ணைக் காட்டி ஏதோ சைகை செய்ய, அவர் முன் இடது புறத்தில் சோர்ந்து போயிருந்த குழுவிடம் சென்று**

**வலது நபர்:** சீசீசீ... நீங்கள் இப்படிச் சோர்ந்து விழுவதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கைகளில் ஏதோ ஒன்றைக் காட்டி)

இது மல்ரி விற்றமின் ரொனிக். சோர்வு நீங்குக சுறுசுறுப்பாகுக...

அவர் எறிந்த பொருளை எடுத்துத் தம்மீது அணிந்து கொள்ள முன் இட்து புறக்குழு வேகமடையும் கிருஸ்ணன் போல் வேடமளித்து ஒருவர் முன்வலது புறக்குழுவிடம் செல்வார். கிருஸ்ணன் வரவைக் கண்டு முன் இடப்புறக் சூழலில் இருந்த ஒருவர்

ஒருவர் : கிருஸ்ணன் வருகிறான் தூது கொண்டு பொறியாசனம் அமைத்துப் பொசுக்கி விடுவோம்.

இன்னொரு: ஏய் அமத்தி வாசி

ஏதோ சூது நடக்கும் பயனற்றுப் போகும் மௌன மொழியில் காரசாரமான விவாதம் முடிவு தோல்வி பெரியவர் பக்கத்தில் இருந்து சலசப்பு. கூரிய ஓர் ஆயுதத்தால் தொட்டிலில் தொங்கும்.

குழந்தையைத் குத்த குழந்தை அழலாம்.

இடது நபர்: குழந்தை அழுகிறது பாவம்

பெரியர் : அது தான் நான் ஆட்டிவிடுகிறேன்.

கிருஸ்ணர் திரும்பி வர முன்வலது புறக்குழுவில் இருந்து ஒருவர்

ஒருவர்: துளி கூட என்றும் கிடையாதாம்.

வலதுநபர்: அது தான் எமது விருப்பமும்.

இப்பொழுது முன் இடது புறக்குழுவில் இருந் து ஒருவர் வில்லை எடுத்து அம்பைத் தொடுத்து மத்தி மத்தியில் ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலக்கில் குறியாக இருப்பார் இதனைக் கண்ட வலது நபர் பதட்டத்துடன் வில்லை வளைத்தவனிடம் ஓடி வந்து

வலது நபர்: குழந்தாய் அழகான மரக்கிளைகள் நன்றாகவே தெரிகிறது. இல்லையா?

அவன்: இல்லை

வலது நபர்: பொட்டுப் பொட்டிடாய்ச் சூழ்ந்திருக்கும் பட்டுப் போன்ற இலைகள்

அவன் : தெரியவில்லை

வலது நபர்: வாசனை வீசி மயக்கம் தரும் அந்த மலர்கள்......

அவன்: தெரியவே இல்லையே

வலது நபர்: கிளையைப் பற்றிப் பிடித்தீருக்கும் அந்தப் பலமான கால்கள்

அவன்: அப்பாடி ஒன்றுமே தெரியவில்லை.

வலதுநபர்: ஆ...மிகப்பதட்டத்துடன் பெரியவரிடம் ஓடுவார் பெரியவர் அஞ்சற்க என்பது போல் கையசைப்பார்.

பாடல் எழும்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே அதில்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ...?

**பாடல் முடிவடைய முன் இடது குழுவும், முன் வலது குழுவும் நேருக்கு நேர் மோதக்கூடும். ஜதியும் கையாளக் கூடும்.**

தக்கச் ஜீனு தக்கத்திமி
தக்கச் ஜீனு தக்கத்திமி
தக்கத்திமி தக்கத்திமி
தக்கச் ஜீனு தா... ...

அன்னை கண் விழித்து பெரியவரைத் திரும்பிப் பார்த்து

**அன்னை:** என் பிள்ளைகளை வதைக்கும் நீவிர் நரகத்தில் இடப்படுவீர்

**பெரியார்:** நான் சிவப்பிரம்மவிஷ்ணு. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் அனைத்தும் எனது பணி. யாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம்.

**வலது இடது நபர்கள் இரு குழுக்களிடமும் சென்று கதைத்துப் பேசிக் உற்சாகப்படுத்த அவர்கள் அன்னையைப் பிய்த்து விடுமாறு நேர் எதிர்த் திசையில் இழுப்பர்.**

**ஓவ்வொருவராக வந்து முதலில் அணிந்து அழகு பார்த்த ஆபரணங்கள், காஞ்சிபுரம், கனகாம் பரத்தைப் பிடுங்கிச் செல்வர். ஒருவர் வந்து குங்குமத்தையும் அழித்துச் செல்வார். பாடல் தொடங்க அன்னையின் அவலமும் அதிகரிக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்:

அலைகடல் துரும்பானேன்
அடவிமீதில் அகப்பட்ட சேயானேன்
அனலைக்கக்கும் உலையிலிட்ட மெழுகானேன்
ஆலை வாய்க் கரும்பானேன்.
பெற்றெடுத்த பிள்ளைகளை ஒற்றுமையாய்
வாழ வைக்கத் துடிக்கின்றேன்.

**பாடல் முடிவடையும் போது வெள்ளைச் சேலைவிற்கும், பொய்க்கால் பொய்க்கைவிற்கும், சவப்பெட்டி விற்கும் வியாபாரிகள் மேடையில் தோன்றுவர். வெள்ளைச்சேலை வியாபாரி ஒரு கையில் வெள்ளைச் சேலைகளும் மறுகையில் பல தாலிக் கொடிகளையும் காவிக் கொண்டு வந்து**

**வியாபாரி1:** ஓடி வாங்கோ, ஓடி வாங்கோ வெள்ளைச் சேலை, வெள்ளைச் சேலை, தாலி
இழந்தவர்களுக்கெனத் தரமாகத் தயாரிக்கப்பட்டது
ஓடி வாங்கோ...ஓடி வாங்கோ...

**2 வது வியாபாரி பொய்க்கால்கள், கைகள் சுமந்து கொண்டுவந்து**

**வியாபாரி 2:** பொய்க்கர்ல், பொய்க்கை....வலமோ? இடமோ? பொருத்தமான நிறங்களில் தேவையான அளவுகளில் தரலாம் மானிய விலை, தவணை முறைக் கட்டுப்பணம், ஓடி வாங்கோ! ஓடி வாங்கோ!

**3வது வியாபாரி சவப்பெட்டிகளைக் காவிக்கொண்டு வந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரி 3: பெட்டி பெட்டி திறம் பெட்டி குஞ்சிலிருந்து குழந்தை வரை, குழந்தை முதல் கிழடு வரை சகல அளவுகளிலும் கனகச்சிதமாகத் தயாரிக்கப்பட்டது. வாருங்கோ, வாருங்கோ...

பெரியவர்: பெரிய சிரிப்புடன் - கைத்தொழிற்துறை அபிவிருத்தியடைந்து செல்கிறது.

அன்னை: நான் ஏன் இப்படிக் கலங்கித் துடிக்க வேண்டும?. என் பெருமைகளை இழந்து ஏன் சீரழிய வேண்டும்? இதற்கெல்லாம் யார் காரணம்? இதற்குத் தீர்வு என்ன? இதற்குத் தீர்ப்பு நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

எல்லோரும்: தீர்வு எங்கள் கைகளில்

**பாடல் ஒலிக்க நடிகர்கள் ஆடியவாறு பார்வையாளர்களுடன் சங்கமிக்கலாம்.**

பாடல்: மன்பதை ஒழியுது
புண்பட்டுத் துடிக்குது
மாற்றிடுவோம் வாரீர்
வீடுகள் உடையுது
கோயில்கள் நொருங்குது
தீர்வு காண வாரீர்
ஒன்றாய்க் கரம் கோர்ப்போம்
ஒருமித்துக் குரல் கொடுப்போம்
நன்றே செய்திடுவோம் தீர்வை
இன்றே கண்டிடுவோம்.

- திரை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உங்கையிற்பிள்ளை உனக்கே"

திரை விலகும் போது வீடு ஒன்றின் முன் விறாந்தை காட்சியளிக்கும் இராமநாதர் குடும்பத் தலைவர். வானொலிப் பெட்டி ஒன்றை திருத்திக் கொண்டிருப்பார். மூத்த மகன் ரவி சேட் அயன் பண்ணிக் கொண்டிருப்பான்.தாய் மனோன்மணி தேநீர் பரிமாறுவார். இரண்டாவது மகள் பரிமளா வெளியில் இருந்து வீட்டினுள் நுழைந்தவள் பூச்செடியை உற்றுப் பார்த்து விட்டு கோபத்துடன் தாயை பார்ப்பாள்

பரி: அம்மா இந்த றோஜாப் பூவை ஆர் பிடிங்கினது.
-அமைதி-
நான் ஒருத்தி கத்திக் கொண்டிருக்கிறன் நீங்கள் உங்கட பாட்டில திரியிறியள்.

ரவி: அம்மா சூடாயிருக்குது. கொஞ்சம். ஆத்துங்கோவன் (தங்கையைப் பார்த்து) நான் ரீயைச் சொன்னான்.

பரி: யூனிவெஸ்ரி எண்டாப் போல உனக்குப் பெரிய நினைப்பு.

மனோ: அது கிடைக்கேல்ல எண்டதால உனக்கு நெடுகலும் கொதிப்பு.

இராம: என்னப்பா...... என்ன? என்ன? பரிமளா கேட்டதுக்கு பதிலச் சொல்லுங்கோவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி: பரிமளா..... நீ முதல் ரீயைக் குடி. பூவைப் பிடுங்கினது ஆர் எண்டு நான் சொல்லுறன்.

பரி: இல்லை ஆர் பிடுங்கினது எண்டு சொல்லு.....என்ன வடிவான றோஜாப் பூ. ஆசை தீரப் பாக்க முடியாமல் போச்சுது. இண்டைக்கு நேற்று இல்லை நெடுகத்தான் இது நடக்குது.

மனோ: ஆளை அறிஞ்சு என்ன வழக்கு வைக்கப் போறியே?

பரி: அந்த விரலை முறிக்கப் போறன்.

மனோ: விரலை முறிச்சால் றோஜாப்பூ கிடைச்சிடுமே ரீயைக் குடிபாப்பம்.....ஆறப்போகுது.

இராம: பிள்ளை பரிமளா உன்ர தங்கச்சி பிரியா தான் பிடுங்கிப் போட்டாள். அக்கா அடிப்பாளடி எண்டு சொன்னான். தன்ர ரீச்சருக்குக் குடுக்கப் போறன் எண்டு கொண்டு ஓடிட்டாள்.

(பரிமளா ரவியைப் பார்ப்பாள்)

ரவி: ஐயோ? என்னை ஏன் முறைச்சுப் பார்க்கிற. காலமை உனக்கு முதலே நான் வெளிக்கிட்டுப் போனது தெரியும் தானே. வந்த உடனே பூவைக் காணல்ல எண்டு அம்மாவைக் கேட்டனான். நீ கத்தப் போறாய் எண்டும் சொன்னான்

பரி: வரட்டும் அவவின்ர விரலை முறிக்கிறனோ இல்லையோ பாருங்கோ........

மனோ: என்னடி சும்மா முறிக்கிறன்.. முறிக்கிறன் எண்டு முறிக்கித்தள்ளிக் கொண்டிருக்கிற. முறிச்சுப் போட அது என்ன முருக்கம் தடியே. பூ வெண்டால் நாளைக்கும் பூக்கும் தானே

இராம: பரிமளா கோவிக்காத பிள்ளை. அழகான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களைக் கண்டால் அதைக் கொண்டு போய் தன்ரை ரீச்சருக்குக் குடுத்து மகிழ்ந்து குதூகலிக்கிறது அவள்ள பிறவிக்குணம். விடு....உன்ர தங்கச்சி தான....பாவம்.

ரவி: ஏன் இண்டைக்கு ஆசிரியர் தினமோ?

மனோ: அவளுக்கு வரிசம் முன்னூற்றறுபத்தைந்து நாளும் ஆசிரியர் தினம் தான். பூ... இல்லாமல் எப்ப போனவள் பள்ளிக்கு.?

இராம: பூவைப் பிடுங்கிக் கொன்டு போகேக்க பாக்க வேணும் அவவின்ர புழுகை. என்ன துள்ளித் துள்ளிக் கொண்டு போனவள் தெரியுமோ?

புரி: ஓ.... ஓ....இப் பூவோடை போவினம். பிறகு பத்தாம் பன்னிரண்டாம் வகுப்புக்கு வரேக்க பொலிடோல் போத்திலோட போவினம். இது தான் உண்மை யதார்த்தம்.

இராம: ரீச்சர் மாரில உனக்கேன் பிள்ளை இவ்வளவு கோபம். உப்பிடிக் குதர்க்கம் பேசாதை. ஆசிரியத்துவம் எண்டைக்கும் புனிதமானது.

மனோ: ஒழுங்காப் படிச்சுப் பாஸ் பண்ணத் தெரியாது. குறைபிடிக்கிறா குறை.

புரி: அம்மா... என்ர இந்த நிலைமைக்கு காரணம் மைனா ரீச்சர். மைனா ரீச்சர்....

**(விக்கி விக்கி அழுவாள்)**

ரவி: அம்மா... நீங்க என்னம்மா...சும்மா அதையும் இதையும் கதைச்சுக் கொண்டு..."பரி செக்கண்ட சையை எடு நான் உனக்கு கெல்ப்" பண்ணுவன்.

மனோ: பரி அழாதை எனக்கென்ன உன்னில கோவமோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் குழம்பிற. அழகிறதை நிப்பாட்டு பாப்பம். பிரியாவின்ர மனத்தையும் குழப்பேலாமற் போச்சுது. நீ இந்த முறை கட்டாயம் "பாஸ்" பண்ணுவ. அதத்தான நாங்கள் எல்லோரும்விரும்புறம்.

புரி: இல்லை... இல்லை... என்னால் ஏலாது என்ர மனம் கசங்கிக் கருகி நொருங்கிப் போய் இருக்கிறது உங்களுக்கு எங்க தெரியப் போகுது.

மனோ: உன்ர கதையைப் பார்த்தால் "ஏ.எல்" எடுக்கிற எல்லோரும் யூனிவே சிற்றி என்ர பண்ணவேணும் எண்ட மாதிரியெல்லே கிடக்கு. படிப்பிக்கிறது மட்டும் தான் ரீச்சேஸ்ன்ர வேலை.

இராம: இவன் உன்ர அண்ணன் ரவிச்சந்திரன் இண்டைக்கு என்ஜினியரிங் செய்து கொண்டிருக்கிறான் சின்ன வகுப்பில படிக்கேக்க தன்ர ரீச்சேஸ்மார் எண்டால் சரியான விருப்பம். எங்கடை சொல்லை எங்க கேட்டான் ரீச்சேஸ்மார் ஸ்கூல்ல சொல்லுறது தான் இவனுக்கு வேதவாக்கு.

மனோ: மூன்றாம் வகுப்பு படிக்கிற காலம். வழமை போல அண்டைக்கும் அண்ணான்ர பயிற்சிக் கொப்பியைப் பார்த்தன். அதில தவறான ஒரு விடைக்கு ரீச்சர் சரி போட்டிருந்தா.

இராம: ரீச்சர் அதை வேணுமெண்டோ? அல்லது விடை தெரியாமல் போட்டதெண்டோ? இல்லைப்பிள்ளை. ஏதோ கவனயீனம். பிழையைச் சரியெண்டு ரீச்சர் போட்டிட்டா எண்டு சொல்லாமல் இந்த விடை வந்தால் இன்னும் நல்லாவும் பொருத்தமாகவும் இருக்கும் எண்டு அம்மா சொன்னா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ: வந்துதடி கொண்ணனுக்கு கோபம். உங்களுக்கு என்ன தெரியும்? எங்கடை ரீச்சர விட நீங்க பெரிய ஆளோ...? எங்கட ரீச்சர் சொல்லுறது தான் சரி அவாவின்ர படிப்புத் தெரியுமோ? அடியடா பிடியடா எண்டு அண்ணன் பட்டபாடு. உங்கட அப்பா பி. காம். நான் பி.ஏ எண்டு சொன்னாப் போல அண்ணன் சமாதானம் அடையமாட்டான். எண்டு நல்லாத் தெரியும். அதால எங்களில் தான் பிழை. இனி உப்பிடிச் சொல்ல மாட்டான் எண்டு குட்டிக்கும்பிட்டுத்தான் கோபத்தை அடக்கினது.

ரவி: அம்மா அந்த மூண்டாம் வகுப்புக் கொப்பியைப் பக்குவமாக வைச்சிருந்து தான் "ஓ.எல்" எடுக்கேக்க காட்டினவா.

இராம ரீச்சேஸ் மாரில அண்ணன் இண்டைக்கு வைச்சிருந்த அன்பும் பாசமும் மதிப்பும் மரியாதையும் இண்டைக்கும் வைச்சிருக்கிறான்.

ரவி எழுபத்தாறு வயதைத் தாண்டினாலும் தங்கரத்தினம் ரீச்சர் இன்னும் நல்ல சுகமாகத் தான் இருக்கிறா. நல்ல நாள் பெருநாள் எண்டால் அவாவின்ர ஆசீர்வாதம் எனக்கு பரிபூரணமாகக் கிடைக்கும்.

(பிரியா புத்தகப்பை முதுகில் தொங்க தண்ணீர்ப் போர்த்தலுடன் வந்து பூச்செடிக்கு ஊற்றுவார்)

பிரியா பூ மரமே பூ மரமே நாளைக்கும் எனக் கொரு பூத்தருவாயா? நான் நிறைய நிறைய உனக்கு நீர் தருவேன். நீ மகிழ்ந்து சிரிப்பதை நான் பார்ப்பேன் நான் சிரிப்பதை நீ பார்க்க வேணுமென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கொரு பூ நீ தரவேண்டும் பூவைக் கண்டதும் என் ஆனந்தி ரீச்சர் எப்படி மகிழ்வார் தெரியுமா?

பாடல்

தேன்மொழி பேசும் எங்கள்
ஆனந்தி ரீச்சருக்கு
பூ ஒன்று நான் கொடுத்தால்
பூவாய் மலர்ந்திடுவாள்

புன்னகை பூத்திடுவாள்
புத்தெழில காட்டிடுவாள்
என்கையை மெல்லப் பற்றி
தன்னோடு அணைத்திடுவாள் .....தேன்மொழி
பாட்டுப் பாடி ஆட வைப்பாள்
கதைகள் சொல்லிக் கேள்வி கேட்பாள்
நாட்டு நடப்புக்களை
நன்றாகச் சொல்லிடுவார்.....தேன்மொழி
ஓடி விளையாட வைப்பாள்
கூடிவாழ வழி வகுப்பாள்
தேடிப் பெறு கல்வி என்று
நாடி வந்து நன்மை செய்வாள் ......தேன்மொழி

**(பாடி ஆடியபடி பிரியா உள்ளே செல்ல தாய் தந்தை அண்ணன் ஆகியோரும் உள்ளே செல்வர். பரிமளா எங்கோ வெறித்தபடி பார்த்துக் கொண்டிருப்பாள். பாடலுக்கான இசை இப்போது சோக இசையாகப் பரவும். பரிமளா மேடையின் நடுப்பகுதிக்கு வருவாள்)**

பரிமளா: மைனா ரீச்சர்....
ஆனந்தி ரீச்சரில் பிரியா காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியம் போல் நானும் ஒருகாலம் உங்களை
என் மனம் முழுக்கப் பூசித்தேன்
பின்னேர வகுப்பென்றும்
முன்னேறும் வழியென்றும்
என் நேரமும் உங்கள்
பின்னலோடு தானிருந்தேன்
ஏன் ரீச்சர்....? ஏன் ரீச்சர் எனக்கு
இத்தனை சஞ்சலங்கள்
சஞ்சீவன்....
உங்கள் அன்பு மாணவன் தான்.
அஞ்சாமல்
அவனோடு கதையென்று சொன்னீர்கள்
தஞ்சமடி அவனுனக்கு......
கதைகள் பல புனைந்தீர்கள்.
வஞ்சம் இல்லா என் மனத்தில்
விதை யொன்று விதைத்தீர்கள்
பார்த்தான்....பயந்தேன்.
சிரித்தான்.... சிதைந்தேன்
அழைத்தான் அலைந்தேன்
கனவிலும் நனவிலும்
அவன் முகம் கண்டேன்......
உயிரிலும் உணர்விலும்
என்னை நான் இழந்தேன்
படித்த பாடங்கள்
அனைத்தையும் மறந்தேன்
பரீட்சைப் படிப்பினைப்
பாதியில் துறந்தேன்
ஆனாலும் அவனை இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை.......

மைனா ரீச்சர் மட்டும்

மாறாது என்கின்றா.

யாருக்குச் சொல்லி அழ

யார் தலையில் போட்டுடைக்க....

**-உள்ளே செல்வாள்.**

**களம் மாறும் அந்த இடம் ஆரம்பக்கல்வி மாணவர்களின் விளையாட்டு முற்றமாகும். முதலாம் தரப்பிள்ளைகள் ஓடி விளையாடிக் கொண்டிருப்பர் ஆசிரியரைக் குறிக்கும் உருவம் ஒன்று தோன்றும்.**

**உருவம் :** ஆம்பிளைப் பிள்ளையளும் பொம்பிளைப் பிள்ளையளும் சேந்தோ விளையாடுறியள். உது பிழை. உது பிழை ஆம்பிளைப்பிள்ளை பொம்பிளைப்பிள்ளை சேர்றது பிழை.

**பிள்ளை:** ஏன் சேர்? விளையாடினால் என்ன?

**உரு** ஏன்? எதுக்கு? எண்டால் என்ன பச்சையாச் சொல்லுறதே?

**பிள்ளை:** நாங்க முதலாம் வகுப்புத்தான சேர்?

**உரு:** முதலாம் வகுப்பெண்டாப் போல முன்னுக்குப் பின்னுக்குப் ஒண்டும் இல்லையே? அந்தா... அந்தா... கையைப் பிடிச்சு விளையாடிறியள் விடு. விடு. விடு. கையைப் பிடிக்கக் கூடாது.

பிள்ளை: ஏன் சேர்? கையில என்ன கிடக்கு.

உரு: சொல்லுவன் இப்ப. பக்கத்தில வடிவான ரீச்சர்மார் பார்த்துக் கொண்டிருக்கினம் டேய் ஆம்பிளையள் எண்டால் நெருப்பெண்டும் சொல்லுறது. இரும்பெண்டும் சொல்லுறது. பொம்பிளையள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டுசொன்னால் பஞ்செண்டும் சொல்லுறது காந்தம் எண்டும் சொல்லுறது. நெருப்பும் பஞ்சும் எரிய... இரும்பும் காந்தமும் ஒட்டுப்பட பிறகு கரைச்சல் கனக்க வரும். நீ ஆம்பிளை என்ன?. ."போய்" போய் அதில இரு. நீ பொம்பிளையே கேள் இதில தான் இருக்க வேணும். படிக்கேக்க, கதைக்கேக்க, சிரிக்கேக்க, விளையாடேக்க, வெளியில் போகேக்க, உள்ளுக்கு வரக்க புறிம்பு புறிம்பாத் தான் இருக்க வேணும்.

**(மாணவி ஒருவரை அழைப்பார்)**

நீ இஞ்சை வா..... எங்களை நீ..... என்ன நினைச்சுக் கொண்டிருக்கிற.எத்தின நாளாச் சொல்லுறன் பொம்மல் கை வைச்ச யூனிபோமை நீ போடாதையெண்டு. கேட்டியே நீ.... கேட்டியே நீ இந்தப் பாடசாலையின்ர சட்ட திட்டம் ஒழுக்க விதிகள் பண்பாடு பாரம்பரியம் எல்லாத்தையும் மீறி நடக்கிற.

**மாணவி:** சேர் என்னட்டை ஒரு யூனிபோம் தான் இருக்குது சேர்.

**உரு:** என்ன சொல்லுறீர். வரிசத்துக்கு வரிசம் யூனிபோம் துணிவாரி வழங்கிறம். எங்கட பாடசாலையின்ர சட்டதிட்டம் ஒழுக்க விதிகள் பண்பாடு பாரம்பரியங்களுக்கு அமைவாகத் தைக்கச் சொல்லுறம். நீர் என்னோடை லோக்கதைக்கிறீர் "லோ". வெளியில போய் முட்டுக்கால்ல நில்லும்.

**மாணவி** **(முட்டுக்காலில் நின்று கொண்டு)** தையல் கார அன்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மல் கை வைச்சுத் தந்திட்டா சேர்.

உரு: பிறகும் பார் பிறகும் பார் பொடு பொடு எண்டு பொய் சொல்லுறதை. சரி சரி வேறை ஒரு புதுத்துணி வாங்கித் தைச்சுப் போடும் பாப்பம்.

மாணவி: வீட்டில கஸ்ரம் சேர். வேற துணிவாங்கிக் காசு இல்ல சேர்.

உரு: கொப்பன் என்ன? சொத்தியோ முடமோ? வெத்தில, பாக்கு, சீவல், போயில, பீடி, சிகரட், கசிப்பு, கஞ்சா, காச்சுச், சாராயம், எல்லாம் வாங்கக் காசிருக்கு இன்னொரு யூனிபோம் தைச்சுப் போடக்காசில்ல. ஆ... ஆ...

மாணவி: எனக்கு அப்பா இல்ல சேர்.

உரு: பார்த்தியோ? பார்த்தியோ? பேந்தும் பேந்தும் பொய் சொல்லுற. எடுத்துக் கொண்டு வா. கத்தரிக்கோல் பொம்மல் கைச் சுருக்கை வெட்டிவிட்டால் எல்லாம் சரிவரும்

**கத்தரிக்கோலால் யூனிபோமின் ஒரு கை பொம்மல் சுருக்கு வெட்டப்படும் மாணவன் ஒருவன் கடிதம் கொண்டு வந்து கொடுப்பான்.** அவர் வாசிப்பார்

உரு: கட்டாயக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்னைப் பிரதான பரப்புரையாளனாக எங்கட பெரியவர் என்னைத் தெரிவு செய்து கடிதம் அனுப்பியிருக்கிறார். நான் பாருங்கோ உளவியல் சம்பந்தமாக உள்ள புத்தகம் எல்லாத்தையும் கரைச்சுக் குடிச்சு பட்டங்களும் எடுத்துப்போட்டன். அந்த வகையில் இந்தப் பொறுப்பு எனக்கு ரொம்பப் பொருத்தம் பாருங்கோ. கருத்தரங்குகள் காட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல்கள், விளம்பரங்கள், வீதி நாடகங்கள், எண்டு கட்டாயக் கல்வியின் அவசியத்தைப் பற்றி ஒரு முழங்கு முழங்கி விட்டனெண்டால் வயித்துக்க இருக்கிற பிள்ளையும் இறங்கி ஓடிடும் பள்ளிக் கூடத்துக்கு ஓ.....ஓ..... எதுக்கும் முன்னாயத்தம் அவசியம் வாறன்.

**(உருவம் மேடையில் இருந்து நீங்க வெட்டிய சட்டையுடன் அந்த மாணவி மேடையின் நடுப்பகுதிக்கு வருவாள்)**

**மாணவி:** எங்கடை வீட்டு நிலமையை விளங்கிக் கொள்ளுற பக்குவம் இப்ப நிறைய எனக்கு இருக்கு.
வீட்டுக் கஸ்ரங்களை விளங்கிக் கொண்டு
நானென்னண்டு இன்னொரு யூனிபோம்
வேண்டித் தாருங்கோ எண்டு கேக்கிறது
என்ர சட்டைக்கை வெட்டுப் பட்ட உடன
மற்றப் பிள்ளைகள் பழிச்ச பழிப்பு
சிரிச்ச சிரிப்பு.... எவ்வளவு வெக்கமாக இருந்தது.

**(மேடையின் முன் இடத்திற்கு அந்த மாணவி அசைய முன் வலதிற்கு அந்த உருவம் தோன்றி சொற் பொழிவாற்றலாம்)**

**உரு:** படிக்கிற பருவத்திலே பிள்ளைகள் கட்டாயமாகப் பாடசாலைக்குப் போக வேண்டும். அவர்களுக்கு இருக்கும் தடைகளை நாங்கள் முன்னின்று அகற்றி கல்வி அபிவிருத்திக்கு ஆவன செய்ய வேண்டும். பள்ளிக்குப் பிள்ளையள் கட்டாயம் போக வேண்டும்

**மாணவி:** பள்ளிக்கூடத்தைப் பார்க்கப் பயமாகக் கிடக்கு.
பள்ளிக்கூடத்தை நினைக்க கோபம் வருகுது
பள்ளிக்கூடத்துக்கு இனி நான் போக மாட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு: கல்வி இல்லா உலகு பாழ்.
கல்வியோடு கூடி வாழ்.
அதனால் பெருகுது நன்மை.
இதுதான் இன்றைய உண்மை.

மாணவி: பள்ளிக்கூடத்துக்குப் போ எண்டு என்னைக் கட்டாயப்படுத்தினால் நான் சாவன்.
செத்த பிணமாகச் சுடலைக்குப் போறதும்
நடைப் பிணமாகப் பள்ளிக்கூடம் போறதும்
என்னைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்று தான்
**(மாணவி மேடையை விட்டு நீங்குவாள்)**

உரு: இப்ப நாடகத்தைப் பாருங்கோ
**(ராசன் புலவர் வேடமிட்டவாறு மேடையில் தோன்றுவாள்)**

புலவர்: கற்கை நன்றே கற்கை நன்றே.
பிச்சை புகினும் கற்கை நன்றே
மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன் சிறப்புடையவன் மன்னர்க்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

முருகப் பெருமான் ஔவையைப் பார்த்து இனியது எது? என்று கேட்டான். அதற்கு அவன்.....

இனியது கேட்கின் தனி நெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறவினர்ச் சேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனினும் இனிது அறிவுள்ளாரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

**புலவர் மேடையை விட்டு நீங்க ராசனின் தந்தை தங்கராசா தாய் பரமேஸ்வரி மேடையில் தோன்றுவர்.**

**தங்க:** எப்படியப்பா என்ர பிள்ளையின்ர நடிப்பு.

**பரமேஸ்:** என்ர பிள்ளை யெண்டு ஏன் சொல்லுவான். ஏங்கட பிள்ளை யெண்டு சொல்லுங்கோ.... ரண்டு நாளா உப்பிடியே சொல்லிக் கொண்டிருக்கிறயள்.

**தங்க:** என்ர எண்டா அது நானும் நீரும் தானேயப்பா. இண்டைக்கு ஸ்கூலால வந்த உடனே நான் இவனுக்கு பொன்னாடை போர்த்தப் போறன்.

**பரமேஸ்:** பிறகும் பாருங்கோ பொன்னாடை போர்த்தப் போறன் எண்டு ஒருமையில் கதைக்கிறியள். ரெண்டு பேருமாகப் போர்ந்து விடுவம்.

**தங்க:** சரியான புழுகில தானப்பா நீர் நிக்கிறீர். ரெண்டு பேரும் சேர்ந்து தான் எல்லாம் சரியோ.

**பரமேஸ் :** அதிபர் ஆசிரியர்மார் எல்லோரும் மகனைப் பாராட்டேக்க நான் எவ்வளவு சந்தோசப்பட்டனான் தெரியுமோ?....

**தங்க:** பதினாறு வயதில நானும் என்ர பிள்ளை மாதிரித்தான் உசாரா இருந்திருப்பன் என்னப்பா.?

**பரமேஸ் :** குடும்ப சூழலும் பள்ளிச் சூழலும் மகிழ்வான சூழலாக அமையுமெண்டால் உற்சாகத்துக்கும் சுறுசுறுப்புக்கும் குறைவிருக்காது தான.

**(மகள் ரஞ்சி ஓடி வருவாள் பின்னால் ராசனும் விரக்தியோடு வருவான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சி: அம்மா....அண்ணனுக்கு பள்ளிக்கூடத்தில் இண்டைக்கு சரியான பிரச்சினை.

பரமேஸ்: என்ன பிள்ளை சொல்லுற.? என்ன பிரச்சினை?

ரஞ்சி: அண்ணா ஏதோ குழப்படி செய்ததெண்டு அந்த "சேர்" "பிறேயரில" பகிரங்கத் தண்டனை குடுத்தவர். அண்ணான்ர கன்னத்தப் பொத்தி அடிச்சவர். **(அழுவாள்)**

தங்க: அழாமல் சொல்லு பிள்ளை.... பிறகு என்ன நடந்தது.

ரஞ்சி: பின்னேரம் ரியூட்டரிக்கு அந்த சேர் போகேக்கை....

**தந்தையின் காதில் ஏதோ இரகசியம் சொல்லுவாள்**

**இசை அபசரமாக ஓங்கி ஒலிக்கும். பாடல்**

மனிதர்க்குள்ளே இருக்கும்
மிருகக் குணத்தைச் சீண்டாதே
புனிதர் கூடப் புயலாய்ப்
பொங்கிட வழியொன்று தேடாதே....
வேரொடு சாய்ந்திரும் சூறைக்காற்று
வீறு.... கொண்டதுவே......
பாரொடு விண்ணாய்ப் பரந்து பறந்து
தீயென எரித்ததுவே....(3)

பரமேஸ்: இப்ப என்னப்பா செய்யிறது?

தங்க: பொன்னாடையை ரெண்டு பேருமாகப் போர்த்து விடுவம். **(கோபமாக)**

கட்டிளமைப் பருவத்தைப் பற்றிக் கதை கதையாச் சொல்லுவாங்கள். கருத்தரங்குகள் வைப்பாங்கள். பிறகு தங்கட வக்கிரங்களையும் வளர்த்துக் கொள்ளுவாங்கள்....

**மகனுக்கு அருகில் சென்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்... நீ என்ர பிள்ளை. எனக்கு விசயம் விளங்கும். நீ அமைதியாக இரு. நான் பார்த்திட்டு வாறன்.

பரமேஸ்: நானும் வாறன்.... **இருவரும் செல்வர்**
**ராசன் மட்டும் மேடையில் தனியாக இருப்பான்**

ராசன்: நான் பிழை செய்திருந்தால் உங்கடை
தண்டனையை முழுமனத்தோடை
ஏற்பன் எண்டு சொன்னனான்
ஒண்டில்ல பத்தில்ல நூறு அடிவாங்கவும்
தயார் எண்டு சொன்னனான்
பகிரங்கமாக வேண்டாம் சேர்...
மற்றப்பிள்ளைகளுக்கு முன்னால வேண்டாம் சேர்...
அதிலும் என்ர வகுப்பு பொம்பிளைப் பிள்ளைகளுக்கு முன்னால வேண்டாம் சேர்
உங்கட காலைப் பிடிச்சுக் கெஞ்சினனான்
கையெடுத்துக் கும்பிட்டனான்.

**(கோபமாக)**
அடிச்சுப் போட்டியள் அடிச்சுப் போட்டியள்.
பொம்பிளைப் பிள்ளைகளுக்கு முன்னால அடிச்சுப் போட்டியள்
வெக்கமாகக் கிடந்தது விசராகக் கிடந்தது
சேர்.... நீங்க அடிச்ச அடி வலிக்கேல்ல...
என்ர வகுப்பு பிள்ளைகள் எல்லாம் பாத்ததுகள்
அந்த வலி... அந்த வலி என்னால் தாங்கேலாமல் போச்சுது
அதுக்குப் பிறகு... அதுக்குப் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்... நானாக இயங்க ஏலாமல் போச்சுது.

**(உள்ள செல்ல தங்கை ரஞ்சி வருவாள்)**

**ரஞ்சி:** அண்ணா நீ ஆறுதலுடைய வேணும்
மனத்தை பக்குவப்படுத்த வேணும்
பிறேயரில எல்லாருக்கும் முன்னால் நீ தண்டனை பெற வரேக்க.
உன் முகத்தில் உறைஞ்சு போயிருந்த சோகம்...
ஓங்கி உன்ர கன்னத்தில் அடி விழேக்க
அண்ணா நான் வாய் விட்டு அழுதனான்...
கன பிள்ளையள் அழுதவ...
நான் இனி அந்த
பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டன்
எந்த பள்ளிக்கூடத்துக்கும் போக மாட்டன்.
எங்கட மனங்களைக் கசக்கிப் பிழியிற கூடங்கள்
எல்லாம் பள்ளிக்கூடங்கள் அல்ல
கல்விக்கூடங்கள் அல்ல....

**(துங்கராசா பரமேஸ் மேடைக்கு வருவர்)**

**தங்க:** சம்பந்தப்பட்ட எல்லோருடையும் கெஞ்சி மண்டாடீட்டம். காலில விழுந்து மன்னிப்பும் கேட்டிட்டம் மகன் ராசன் நீ பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டால் தொடர்ந்து படிக்க வாய்ப்பிருக்கு. இல்லை யெண்டால் படிப்பையும் கைவிட்டு கோடு கச்சேரி எண்டு தான் திரிய வேண்டி வரும். மகன் சரி பிழையைப் பற்றிப் பிறகு ஆராய்வம். நீ அவரிட்டை மன்னிப்புக் கேள். கேட்கத்தான் வேணும். எதிர்காலம் எண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கொண்டிருக்கு

பரமேஸ்: மன்னிப்புக் கேட்கிறதில என்னையா இருக்குது.? ஏன் முகத்தைச் சுளிக்கிற ஏதேன் கதையன். என்னெண்டாலும் மனம் விட்டுக்கதை. பேசாமல் இராதை.

தங்க: உன்னைப்பற்றிய கனவுகள் ஆசைகள் இலட்சியங்கள் எல்லாம் மனம் நிறைய இருக்கு. மன்னிப்பு எண்ட ஒரு சொல்லில தான உன்ர வாழ்க்கையே இருக்கு. நாளைக்குக் காலையில மன்னிப்புக் கேள் மன்னிப்புக் கேட்கிற. நாளைக்கு நான், அம்மா உன்னோடை சேர்ந்து வாறம்.

**(ராசன் விரக்தியுடன் உள்ளே செல்வான்)**

பரமேஸ்: ராசன்ர முகத்தைப் பாத்தா அவ்வளவு நல்லா இல்ல. மன்னிப்புக் கேட்கச் சம்மதிக்க மாட்டான் போல இருக்கு.

தங்க: இந்த வயதில அப்படித்தான் இருக்கும். இதை அவை விளங்கிக்கொள்ளுகினம் இல்லையே...

இனி அவனைத் தெண்டிக்க வேண்டாம். மன்னிப்புக் கேட்க மாட்டான். எண்டால் இந்தக் கதையை இத்தோடை விடுவம். வீட்டோட நிக்கிறதோ? வெளிநாடு போறதோ?..... அல்லது தோட்டம் துரவு செய்யிறதோ எண்டு அவன்ர விருப்பத்தின் படி செய்வம்

பரமேஸ்: அவன் விரும்பிறதைச் செய்யட்டும்

**(ரஞ்சி வேகமாக ஓடி வந்து)**

ரஞ்சி அம்மா அப்பா அண்ணன் நஞ்சு குடிச்சிட்டான்....

சோக இசை மேலெழும்

பறையொலி கேட்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்நோக்குக் காட்சி

மாணவி: பள்ளிக்கூடத்துக்குப் போ எண்டு என்னைக் கட்டாயப்படுத்தினால் நான் சாவன்.... நான் சாவன்

பரமளா: என்ர இந்த நிலைமைக்குக் காரணம் மைனா ரீச்சர்.

**பிரியா பூவுடன் வந்து சிரித்துக் கொண்டிருப்பாள்**

ஓ.... இப்ப பூவோடை போவினம். பத்தாம் பன்னிரண்டாம் வகுப்பு வரேக்க பொலிடோல் போத்திலோட போவினம்.

ரவி: எழுபத்தாறு வயதைத் தாண்டினாலும் தங்கரத்தினம் ரீச்சர் இன்னும் நல்ல சுகமாக இருக்கிறா. நல்ல நாள் பெருநாள் எண்டால் அவாவின்ர ஆசிர்வாதம் எனக்குப் பரிபூரணமாகக் கிடைக்கும்.

**(ஏனைய மாணவர்கள் மேடையின் பின் பகுதியில் கூடுவர்)**

மாணவர்: நாங்கள் உங்களிடம் அன்பை எதிர்பார்க்கிறோம். நல்ல அரவணைப்பை எதிர்பார்க்கிறோம். உங்களையே கதியென்று அடைந்தோம்.

கல்விக் கோயிலில் குடியிருக்கும்
தெய்வங்கள் நீங்கள்.
அறிவு ஆற்றல் அனைத்தும் தந்திடும்
ஆதாரம் நீங்கள்.
இருளைப் போக்கி ஒளியைக் காட்டும்
சூரியர் நீங்கள்.
அருளைக் கொடுங்கள் அன்புக்கேங்கும்
மனதைத் தொடுங்கள் நீங்கள்.

-திரை மூடும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசமும் வைத்தனையோ

நாடகம்

## நாடகத்தில் உலா வரும் பாத்திரங்கள்

புண்ணியவதி 80 வயதைக் கடந்த நிலையில் நோய் வாய்ப்பட்டு வாழும் தாய் கருணாமூர்த்தி புண்ணியவதியின் ஒரே ஒரு மகன், அரசாங்க உத்தியோகம்

சுகன்யா - கருணாமூர்த்தியின் மனைவி, ஆசிரியை

விதுசா, மதுசா - கருணாமூர்த்தி , சுகன்யாவின் பிள்ளைகள்

மனச்சாட்சிகள் - கருணாமூர்த்தியை சிந்திக்கத் தூண்டுபவை

ரவிச்சந்திரன் - கருணாமூர்த்தியின் நண்பன்

விசாலாட்சி - ரவிச்சந்திரனின் தாய்

சுந்தரமூர்த்தி, தங்கம், மீனாட்சி, தங்கராசா, சண்முகம், வயோதிபர் இல்லத்தில் வாழ்பவர்கள்

## நாடகத்துள் நாடகம்

சுந்தரமூர்த்தி- முனிவர்

மீனாட்சி - முனிவரின் பத்தினி

தங்கராசா - பரசுராமன்

சண்முகம் - முனிவரின் ஒரு மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச்சுருக்கம்

முதுமையடைந்த பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஊடாட்டத்தைப் பிரதி பலிப்பதாக இக்கதை அமைகின்றது.

பாடசாலைக்கும் வேலைக்கும் என எல்லோரும் வீட்டை விட்டுப் புறப்பட்ட பின் தாயின் தனிமை, நோய் அதன் பாதகங்களை எண்ணிக்கவலைப்படும் கருணாமூர்த்திக்கு மனைவி சுகன்யா வயோதிபர் இல்லத்தில் சேர்ப்பது தொடர்பாக ஆலோசனை வழங்குகின்றாள். இதனை முதலில் நிராகரித்த கருணாமூர்த்தி பின் தன் நண்பன் ரவிச்சந்திரனின் ஆலோசனைக்கமைய வயோதிபர் இல்லத்தைச் சென்று பார்வையிடுகின்றான்.

வயோதிபர் இல்லத்தில் ரவிச்சந்திரனின் தாய் உட்பட பலரும் ஒரு சந்தோசமான சூழ்நிலையில் இருப்பதாகவும் அவர்கள் நாடகம், நடித்து மகிழும் செயற்பாடுகளையெல்லாம் கண்டு தனது தாயின் விருப்பத்தின்படி நடக்க கருணாமூர்த்தி முடிவு எடுக்கின்றார்.

தாய் புண்ணியவதி தனது கடைசிக்காலத்தில் மகனுடனேயே வாழ்ந்து அந்த வீட்டில் மகனின் காலடியிலேயே கண்மூட மனதில் ஆசைப்படுகின்றாள்.

இந்நிலையில் தாயிடம் வந்து தாயின் விருப்பத்தை விசாரிக்கின்றான். தாயின் மௌனத்தில் அவள் இறந்து விட்டதை உணர்கின்றான். தாய் தான் நினைத்ததைப் போல மகன் காலடியிலேயே கண் மூடுகின்றாள்.

முதுமை புனிதமானது போற்றிப் பாதுகாக்க வேண்டியது ஏனெனில் நாளை நாமும் முதியவர்கள்தானே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியவதி கைத்தடியுடன் மேடையில் தோன்றுவாள்

புண்ணி: பிள்ள பிள்ளை ......

விதுசா: என்ன அப்பம்மா?

புண்ணி: வாழை குலை போட்டிருக்கு

கட்டிலில் வந்து படுப்பார்

விதுசா : அக்கா இஞ்சை ஓடிவா.... எங்கடை வாழை குலை போட்டிருக்கு.

மதுசா: வாழை குலை போட்டால் எல்லோருக்கும் கொண்டாட்டம் தானே

பாடல்:
வாழைகுலை போட்டிருக்கு
ஆருக்கு கொண்டாட்டம்.
வாழைக்குலை போட்டதால
வாழைக்குத் திண்டாட்டம்.
மனிதர் செய்யும் நன்மைகளால்
மரங்களும் மகிழும் - தென்னை
தானுண்ட நீரைத் தலையாலே தந்திடும்
தானாகவே வளரும்
பனை மரத்தின் பல பயன்கள்
வீணாகப் போவதில்லை.
வீழ்ந்தாலும் குறைவதில்லை.

பசு பால் தரும்
கோழி முட்டை போடும்.
நாய் வீட்டைக் காக்கும்.
மாமரம் மாம்பழம் தரும்
செய் நன்றிக் கடன் செலுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்தல் நன்மையே நன்மை
செய்தாரைப் போற்றி வாழ்தல்
எல்லோருக்கும் பெருமையே

**தனது தாய் படுத்திருப்பதை கருணாமூர்த்தி பார்த்துக் கொண்டிருப்பான். மனைவி சுகன்யா அன்றாடக் கருமங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பாள்**

**சுகன்யா:** School க்கு நேரம் போச்சு Redline க்கு கீழே இரண்டு நாள் சைன் பண்ணியாச்சு

**கருணா:** உனக்கு உது பிரச்சினை. எனக்கு அம்மாவை தனிய விட்டுட்டு போறது பிரச்சினை.

**சுகன்யா:** எனக்கும் உது பிரச்சினை தான். ஆனால் நான் என்ன செய்யிறது.

**கருணா:** தீராத வருத்தம் வயது போனதால மாறாதாம், தேறாதாம் திறந்த கிணறு, கைக்கெட்டுற இடத்தில் Current switch, வருத்தத்தின்ர கொடுமையால நினைக்காதத நினைச்சால்.

**சுகன்யா:** பராமரிச்சு பாக்கத்தானே பொம்பிளை ஒருத்தியைப் பிடிச்சனாங்க... பாக்கிறன் பாக்கிறன் எண்டு எங்கட பொருள் பண்டங்களைத் தூக்கிக்கொண்டு ஓடிட்டாள். இன்னும் ஒருத்தியை எப்படி நம்புறது? வாவெண்டு கேட்கிறது

**கருணா:** பென்சன் எடுத்துப் போட்டு பேசாமல் இருக்கலாம் தான்.....

**சுகன்யா:** அஞ்சாமல் கதைக்கிறியள் இரண்டும் பெண் குஞ்சுகள் காலமெங்க? நேரமெங்க?
மனதில பட்டத மனம் திறந்து சொல்லுறன்

உலகத்து நடைமுறையை உண்மையாகத்தான் சொல்லுறன்.. பெற்றோர் பராமரிப்பு நிலையங்கள் பல இருக்கு.

**கருணா:** மனம் வந்து சொல்லுறியே? என் மனசைப் புரியலையே? தினம் தினம் அம்மாவென்று அழைக்கும் தெய்வமல்லோ என் தாய்.

**சுகன்யா:** நடவாத ஒன்றில்ல. நம்புங்கோ என் கதையை நானும் பல தடவை யோசிச்சுத்தான் சொல்லுறன். ஊருலகம் செய்யாத செயலை நான் சொல்லலை எந்த நேரமும் சனமும் சந்தடியும் தனிமை என்ற உணர்வே அங்கில்லை. வேளா வேளைக்கு மருந்தும், உணவும், குளிப்பும், முழுக்கும், தேக அப்பியாசமும், மாலை நேரமோ,கிழமை நாளிலோ குடும்பமாய் போய்ப் பாக்கலாம். கதைக்கலாம் இங்குள்ள நிலையைவிட இனிதாய் அது தோன்றலாம்.

**கருணா:** சொல்லுறத சரியெண்டுதான் என்ர மனமும் சொல்லுது.... நல்லதுக்கு தானே நாங்கள் நினைக்கிறது. அம்மா எழும்பட்டும் கதைச் சொருக்கால் பாக்கிறது. கை கழுவத் தண்ணீர், காலை மதியச் சாப்பாடு, மருந்துக் குளிசை எடுத்து வைச்சிட்டு நான் வாறன். பிள்ளையளோட போய் Car ல் ஏறுங்கோ.

**மனச்சாட்சிகள் தோன்றும், அட்டகாசம் பண்ணும்**

**கருணா:** என் மனச்சாட்சிகள் பேசுகின்றன.

**ம.சாட்சி 1:** ஐயா பெரியவரே என்ன முடிவெடுத்தீர். பெத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைக் கொண்டு போய் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் விடப் போறீரோ?

ம.சாட்சி 2: ஏன் உம்மை என்ன சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் விட்டோ? வளர்த்து ஆளாக்கினவா? உங்கட அம்மா.

கருணா: இல்லை..... இல்லை

ம.சாட்சி 1: பத்து மாதம் சுமந்து பெத்து கருணாமூர்த்தி எண்ட பேரும் வைச்சு படிப்பிச்சு ஆளாக்கி, சொத்தோட சுகத்தைக் காணக் கலியாணம் செய்து வைச்சு, நீ பெத்த பிள்ளையைத் தான் தூக்கி அரவணைச்சு பேரப்பிள்ளையளும் பெரியவராய் வளர்ந்த பின்பு வருத்தம் எண்டு ஒய்வெடுக்க தூக்கிக் கொண்டோடி தூர எறியப்போறீரோ....?

கருணா: இல்லை..... இல்லை..... அப்பிடி இல்ல

ம.சாட்சி 2: இந்த முடிவையே உன் பிள்ளைகளும் எடுக்கும். முதுமை நீர் அடையும் போது முதியோர் இல்லம் சேர்க்கும் பெற்ற தாய்க்கு நீர் செய்த கைமாறு பிள்ளைகளால் உமக்கு நாளை கட்டாயம் கிடைக்கும் பார்..... நின்று பார். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுப்பார். உன்னையும் அனாதையாக்குவார்.

கருணா: இல்லை இல்லை நான் முடிவை மாத்திப் போட்டன் என்ர தாயை அனாதையாக்கமாட்டன். முதியோர் இல்லம் சேர்க்கமாட்டன்.

**சார்பான மனச்சாட்சிகள் தோன்றும்**

ம.சாட்சி 3: ஏய் கருணாமூர்த்தி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணா: நீங்கள் யார்.... நீங்கள் யார்...

ம.சாட்சி 4: நாங்கள் உனக்கு சார்பான மனச்சாட்சிகள்

கருணா: ஆ....

ம.சாட்சி 3: கொஞ்சம் யோசிச்சுப் பார். பெற்ற தாயை தனிய வீட்டில் விட்டுட்டு வேலைக்கு போறியள். தனிமையில அவபடுகிற பாடு உங்களுக்குத் தெரியுமோ.....?

ம.சாட்சி 4: எழும்பி நடக்கப் போக விழுந்து எழும்புறா.... பூட்டின வீட்டுக்குள்ள புழுங்கிப் போய்க் கிடக்கிறா.

ம.சாட்சி3: வருத்தத்தின் கொடுமையால கிணத்துக்க விழுந்திட்டால்? கழுத்தில் சுருக்கிட்டு இறப்பினை வரவழைத்தால்.....?

ம.சாட்சி 4: பள்ளிப்படிப்பு, ரியூசன், வேலை சோலி முடிச்சு நீங்கள் மாலை நான்கு மணிக்குப் பிறகு வர இத்தனையும் நடந்துவிட்டால்? ஆரோடு நொந்து அழ ஆருக்கெடுத்து உரைத்து அழ?

கருணா: உண்மை அத்தனையும் உண்மை. உதாலதான் உருக்குலைஞ்சு போறன். உள்ளம் தடுமாறுகிறன்.

ம.சாட்சி 3 ஓம் அது இது அப்படி இப்படி எண்டு ஏதேன் நடந்திட்டால் ஊர் திட்டும். உலகம் பழிக்கும் முடிவை நிதானமாக எடு......

கருணா: தனிமை உணர்வே இல்லாமல் தன்னோடு ஒத்த மனிசரோட கதைச்சுச் சிரிச்சு மகிழ்ந்திருக்க, விரும்பின நேரம் நாங்கள் போய் அம்மாவோடை பார்த்துப் பறைஞ்சு பலகாரம் பறிமாறி.... இது தான் என்ர முடிவு.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசாட்சி 1ம், 2ம் தோன்றும்

ம.சாட்சி 1: கருணாமூர்த்தி என்ன காரியமடா செய்யத் துணிஞ்சிட்ட....? உனக்கப்ப ஏழு வயசிருக்கும்... உன்ர அப்பா காணாமல் போயிட்டார். உனக்கு மஞ்சள் காமாளை. கெஞ்சினாலும் அப்ப மருந்து கிடைக்காத வேளை வைத்தியர் மாரும் கையை விரிச்சதாலை.

ம.சாட்சி 2: ஆறு நாள் அன்னாகாரம் இல்லாமல் விரதமிருந்து அடிமடியில உன்னைக் கட்டிக்கொண்டு, வீடுவீடாய் போய் மடிப்பிச்சை எடுத்து, மாவடிப் பிள்ளை யாருக்குப் பொங்கிப் படைச்சு, அங்கப் பிரதிஸ்டை செய்து ஆளாக்கினவளடா உன்னை, உன் அன்னை.

ம.சாட்சி 1: பள்ளிக்கு நீ நடந்து போனால் உன்ர பாதம் நோகுமெண்டு தோளுக்கு மேல சுமந்து நடந்து தான் நொந்த தாயடா அவள்.

ம.சாட்சி 2: வேண்டாம் வேண்டாம் பாவமடா உன்ர அம்மா.... முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தவளை எந்த முகத்தோட முதியோர் இல்லம் சேர்க்கப் போறு......

கருணா: ஐயோ அம்மா உன்னை நான் விடமாட்டன். நானிருக்கும் காலம் வரை என்னோடை தானம்மா நீ. நான் போட்டு வாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 2**

**(மகன் வேலைக்குச் செல்ல மெல்ல எழுந்து சாமிப்படத்தைப் பார்த்து திருநீறு பூசி கும்பிட்டுக் கொண்டு)**

**புண்ணியவதி:** அம்மாளாச்சி என்ர மகன், மருமோள், பேரப்பிள்ளையள் நல்லா இருக்கவேணும் அவையளுக்கு ஒரு குறையும் வைக்காத ஆச்சி.... என்னால என்ர பிள்ளை கரைச்சல்படக்கூடாது. என்ர மகன்ர காலடியில் தான் இந்தக் கட்டை கண்மூட வேணும். என்ர பிள்ளைக்கு நான் கரைச்சல் குடுக்க மாட்டன்.

**பாடல் வரிகள் இசைக்கப்படும்**

துயில் வரும் நேரம் இருமல் பொறாது.
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து தோகையர்
பாலர்கள் சேயிழை கொண்டு
கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கல கல என்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சோர நடந்து

**தாயின் இருமல் சத்தம் கேட்க கருணாமூர்த்தி மெல்ல மெல்ல தன் தாய்க்கருகில் செல்வான் தாய் புண்ணியவதி கண்விழித்து.**

**புண்ணி:** என்ன ராசா ஏன் கண் கலங்குற. நான் இருக்க மட்டும் நீ அழக்கூடாது. அழவிடமாட்டன்.

**கருணா:** இல்லையம்மா.... வாங்கோ முகம் கழுவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணி: நான் கழுவுவன் நீ இன்னும் வேலைக்குப் போகலையோ?

சுகன்யா: (வந்து கொண்டு) நாங்கள் வேலை முடிஞ்சு வந்திட்டம் மாமி.... நீங்க வாங்கோ முகம் கழுவுவோம்

புண்ணியவதி, சுகன்யா மேடையை விட்டு நீங்க ரவிச்சந்திரன் வருவார்

ரவி: கருணாமூர்த்தி..... நீ சரியாக் கண் கலங்குறீர். உப்பிடித்தான் நானும் முதல் கலங்கினனான் மயங்கினனான். இப்ப இப்ப தெளிஞ்சிட்டன். அங்கை என்ர அம்மா நல்லா இருக்கிறார். நலமாய் இருக்கிறார். தெளிவாய் இருக்கிறார். நீங்கள் விரும்பினால் ஒருக்காய் போய்ப் பார்ப்பம். பிறகு யோசிப்பம்......

கருணா: ஓம் ஓம்

(தலையை அசைத்தல் பின் காட்சி மாறும் கருணாமூர்த்தி வீடு முதியோர் இல்லமாகும். முதியோர் வந்து கூடுவர்)

## காட்சி -3
## வயோதிபர் இல்லம்
## சுந்தரமூர்த்தி பாடலுடன் தோன்றுவர்.

சு.மூர்த்தி: பத்தாவைக் காணன் என்று
முத்தாச்சி தேடிப் போக
பெத்தாச்சி ஓடிப் போனா
பத்தாக்கு ரண்டு போட்டா....

(எல்லோரும் சிரிப்பர்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்: நல்ல கூத்தும் கும்மாளமும் தான். பாத்தாக்க ளெல்லாம் பல்லக்காட்டிச் சிரியுங்கோ.

மீனாட்சி: இஞ்சை நானொருத்தி கோயில் கும்பிடுகிறன். உங்களுக்கு ஒரு நகைப்பும்.... நெளிப்பும்.

சு.மூர்த்தி: சாமி நான் இஞ்சை நிண்டு கூத்தாடுறன். தில்லைக் கூத்தன். என்னட்டை வாரும் வரம் தாறன் உன்ன குமரியாக்கிறேன்....

மீனாட்சி: உனக்கென்னடா என்னோடை எந்த நாளும் ஒரு பகிடி நீ என்ன என்ர புருசனே. நான் வந்து உன்னை கும்பிட....

**துரத்துதல் கலகலப்பு**

விசாலாட்சி: உந்தக் காகத்தைக் கலையுங்கோ. சும்மா காகா எண்டு கரைஞ்சு கொண்டிருக்கு

சண்முகம்: விசாலாட்சி ஆச்சியின்ர மோன் வரப்போறாராக்கும்.

சு.மூர்த்தி: நீ எல்லாரையும் கிளப்பி விடு.... அதுகள் கேற்றப் பார்த்துக்கொண்டு நிக்கட்டும்.

விசாலாட்சி: ஏன் என்ர பிள்ள வருவான் தானே.....

மீனா: சனியோட சனி எட்டு ஞாயிறு ஒன்பது இந்தச் சனி பதினைஞ்சு..... சில

நேரம் இண்டைக்கு வருவாராக்கும்.

விசாலாட்சி: பதினைஞ்சு நாளாக மகன் வரல்லையே.... போன கிழமை வந்த மாதிரிக் கிடக்கு.

மீனா: உண்மையா மோன் வாரார். கேற்ற பார்....

விசாலாட்சி: இஞ்சை மோன்..... வாறான்.

**மகன் ரவிச்சந்திரன் நண்பன் கருணாமூர்த்தி வருவார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி: அப்பு வா மோனை....

என்னப்பு காய்ஞ்சு போயிருக்கிற.....

ரவி: இல்லையம்மா.

சு.மூர்த்தி: காஞ்சு போயிருக்கிறாராம் மோன்.... கிழவியின்ர கதையைப்பார்

தங்கம்: கொள்ளுத் திண்ட குதிரை மாதிரியிருக்கிறார் மோன்.

விசாலாட்சி: பேரப்பிள்ளையள் எப்படி மோன இருக்கினம்.

ரவி: மூத்தவன் ஸ்கொலசிப் எடுக்கிறார். படிக்கினம்.

விசாலாட்சி: ரியூசன் அது இது எண்டு வருத்தாதை பிள்ளையளை வெயிலுக்கை விடாதயடா தம்பி.

சு.மூர்த்தி: வெயிலுக்கு இறங்காம எண்ணெண்டு பிள்ளை ஸ்கொலசிப் படிக்கிறது தாய் தேப்பன் தான் இப்ப வெயிலுக்க காஞ்சு கறுக்கினம்.

தங்கராசா: பொல்லாத கிழவி கேளன் கதையை ஏன் பேரப்பிள்ளையளைக் கூட்டியரல்ல? மருமகள் ஏன் வரல்ல? எண்ட கதையில்ல மோன் மோன் எண்டு கொண்டிருக்கு.

விசாலாட்சி: அண்டைக்குத் தந்த நூல் பிள்ளையார்ற நூல் எல்லாரும் கட்டிப் போட்டியளோ.

ரவி: கட்டவேணும் சாமித்தட்டில கிடக்குக் கட்டுவம்..... அம்மா.... இவர் என்ர நண்பர். கருணாமூர்த்தி உங்களையும் இந்த இடத்தையும் பார்க்க வேணுமெண்டு வந்தவர்.

ரவிச்சந்திரன் கருணாமூர்த்தியை அறிமுகப் படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் விசாலாட்சி அதனைக் கவனத்தில் எடுக்காமல் தன் கதையில் கண்ணாயிருப்பாள்

**விசாலாட்சி:** சின்னவனுக்கு நகம் வெட்டேக்க நன்னுபட்ட காயம் ஆறிட்டுதே.

**ரவி:** அம்மா இவர் என்ர நண்பர்.

**விசாலாட்சி:** உப்பிடித்தான் தம்பி நீ சின்னப்பிள்ளையாய் இருக்கக்கே உங்கட அப்பா உனக்கு நகம் வெட்டக்கே சின்னனா நன்னுப்பட்டுச் சொட்டு ரத்தம் வந்திட்டு, நீ கத்தின கத்து இப்பவும் என்ர நெஞ்சு கலங்குதடா, கடவுளாணத் தம்பி நான் மூண்டு நாள் சாப்பிடேல்ல.

**ரவி:** அம்மா இவர் என்ர

**கருணா:** அம்மா கதைக்கட்டும். கதைக்க விடுங்கோ.

**தங்கராசா:** ஓம், நாங்கள் கதைக்கிற எல்லாத்தையும் பொறுமையோட கேக்கவேணும். முடியுமட்டும் கேக்க வேணும்.

**சண்முகம்:** முகத்த பார்த்துக் கொண்டு கேக்க வேணும். **(விக்குதல்)**

**சு.மூர்த்தி:** முகத்தைப் பாத்துக் கதைக்கிறதெண்டால், ஒரு மணித்தியாலத்துக்கு ஐம்பதுரூபா கட்டவேணும், கொமினிகேசனுக்கு போக வேணும்.

**சண்முகம்:** ஓ.... போன கிழமை போய் ஐஞ்சாறு மணித்தியாலம் காவல் கிடந்திட்டெல்லே வந்த நீ......

**சு.மூர்த்தி:** ஆ.... ஆ..... அவள் கதைப்பாள் கதைச்சவள் தானே, பிள்ளை அவளுக்கும் சோலிதானே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின்ர பெடியளும் சரியான குழப்படியாம் புருசனும் குழப்படியாம்... நான் தனிக்கட்டை போய்க் காவல் கிடந்தன் எண்டாப் போல அவளுக்கு எங்கை நேரம்....?

மீனாட்சி: நீ.... சண்முகம்... ஏன் இப்ப சுந்தரத்தைக் குழப்பின்னி....? சுந்தரம் நீ..... கூத்துப்பாட்டுப்பாடு ஆடு.... எல்லாருக்கும் அது ஆறுதல்.

சு.மூர்த்தி: ரண்டு பேர் இஞ்சை விருந்தினராக வந்திருக்கிறதால போடுவம் நாடகம் ஆடுவம் மேடையில்.

மீனாட்சி: அன்னையர் தினத்துக்குப் போடுறத்துக்கெண்டு பழகின நாடகத்தை இவைக்கு முன்னால போடுவம்.

தங்கம்: கதை வசனம் டைரக்சன் பாடல்,ஆடல், சுந்தரமூர்த்திதானே தொடங்கு நீ

சு.மூர்த்தி: ஓம் தாயைக் காத்த தனயன் எல்லோருக்கும் வசனங்கள் பாடந்தானே..... தந்த துண்டுகள் ஒருத்தரும் துலைக்கேல்லத் தானே.

விசாலாட்சி: கெதியாத் தொடங்கி முடியுங்கோ.... பிள்ளையள் பொழுதுபட முதல் போக வேணும்.

தங்கம்: இதோ தாயைக் காத்த தனயன் அரங்கேறுகிறது.

**மீனாட்சி ஆற்றினுள் நீர் எடுப்பதாகப் பாவனை செய்வாள். அவ்வேளை நீரில் தோன்றிய விம்பத்தைக் கண்டு வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது கணவரான முனிவர் வந்து மனைவியை அழைப்பார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முனிவர்(சுந்):** பெண்ணே..

**மூன்று தரம் அழைத்து இறுதியில் கோபமாக**

பெண்ணே...

நான் உன் கணவன் நான் வந்திருப்பதையும் அறியாது, நான் அழைத்த குரலையும் மதியாது, என்ன மயக்கநிலை?, எதற்காகத் தயக்க நிலை?

**மனை(மீனா):** சுவாமி என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

**முனிவர்(சுந்):** மன்னிப்பது இருக்கட்டும் உன் மயக்க நிலைக்குக் காரணம் ம்....? நீ சொல்லத் தேவையில்லை. நான் என் தவ வலிமையால் கண்டு பிடிக்கிறேன்.

**(தன் கமண்டலத்தைத் திறந்து அதனுள் பார்த்து விட்டு)**

ஆ..... வான வீதியால் சென்ற அந்நிய ஆடவன் ஒருவனைக் கண்டு, அவன் கட்டுடலில் மனதைப் பறிகொடுத்து, உன் கணவன் நான் வந்தையும் மறந்து, அழைத்தையும் இகழ்ந்து தவறிழைத்து விட்டாய் பெண்ணே. பத்தாவுக்கேற்ற பதிவிரதை என்ற சொல்லுக்கு களங்கமிழைத்து விட்டாய்.... கற்பிழந்து விட்டாய் பெண்ணே.... காறி உமிழப் படுவாய்.

**மீனாட்சி:** சுந்தரமூர்த்தி நீ முறுக்கிற முறுக்கில... என்ர வசனத்தையும் மறந்து போனன். பாடமாக்கத் தந்த துண்டையும் துலைச்சுப்போட்டன்.. ஆ.. ஆ.. இப்படியொரு பிள்ளையைப் பெற்றெடுக்க என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம். .......

சு.மூர்த்தி: உது கடைசி வசனம் பிள்ளை.....

விசாலாட்சி: சுவாமி, விண்ணை நான் பார்க்கவில்லை வேண்டுமென்று நடக்கவில்லை. அது தான் பிள்ளை உன்ர வசனம்.

மீனாட்சி: ஓம்.. ஓம்.. ஓம்.. சுவாமி விண்ணை நான் பார்க்கவில்லை. வேண்டுமென்று
இப்படி நடக்கவில்லை. ஜலம் எடுத்த கலத்தினுள் தெரிந்த விம்பம், கண்ணுற்றேன். கலங்கவில்லை, மயங்கவில்லை, மனதைப் பறிகொடுக்கவில்லை. என் கற்பினிற்கும் எந்தக் குறையுமில்லை.... நான் உங்கள் மனைவி நம்புங்கள்.....

முனிவர்(சுந்): ஒரு பொய்யை மறைப்பதற்காகப் பல பொய்களை உரைக்கிறாய்.
ஒன்றுமே தெரியாதவள் போல் நடிக்கிறாய்.
நான் உங்கள் மனைவி என்று துடிக்கிறாய்.

மனை(மீனா): நான் உங்கள் மனைவி என்பதற்கப்பால் ஒரு நல்ல தாய் வீர மைந்தர்களைப் பெற்றெடுத்த ஒரு புனிதமான தாய்.

முனிவர்(சுந்): நீ பெற்றெடுத்த புத்திரனைக் கொண்டே நீ இழைத்த தவறுக்குத் தண்டனை தருகிறேன். உன் தலையை எடுக்கிறேன். என் மூத்த மைந்தனே பார்த்தாயா இக்கொடுமையை? வாளை எடு.... உன் தாயின் தலையை எடு.....

மகன்(சண்மு):என்னால் முடியாது தந்தையே! தாயை வருத்தியவர்களுக்கு ஈரேழு பதினான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகத்திலும் மன்னிப்பு இல்லையென்று வேதங்களும் சாத்திரங்களும் கூறுகின்றன. ஆகவே இந்தப் பழிபாவத்தை நான் ஏற்கமாட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்.

**முனிவர்(சுந்):** தந்தை சொல்வதுதான் உலகில் மந்திரம்.

**விசாலாட்சி:** சுந்தரம் நடிச்சது காணும் வந்திரும்.

**சு.மூர்த்தி:** உனக்கு ஏன் அந்தரம்? நாடகம் எண்டு தொடங்கினால் ஒரு கரை கண்டுதான் முடிக்க வேணும். மறுத்து விட்டான் மூத்த மைந்தன் என்றால் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டான் இந்த முனிவன். அடுத்த மைந்தா ஓடிவாடா தந்தை இட்ட கட்டளையை முடித்து வாடா

**தங்கம்:** அந்தப் பாத்திரத்தில் நடிக்கிற கிழடு சொல்லாமக் கொள்ளாம எங்கயோ போட்டுது.

**சு.மூர்த்தி:** தம்பி ரவிச்சந்திரன் வாரும்.... நடியும்.... நான் சொல்லித்தாற படி செய்யும்.

**விசாலாட்சி:** என்னப்பா நீ பாக்கவந்தவையையும் பங்காளி யாக்குறீர்

**சு.மூர்த்தி:** அது தான் நாடகம் பாரும் சொல்றதுக்கிடையில் தம்பி வந்துட்டான்.

**விசாலாட்சி:** அவன்ர தேப்பன் அந்தக் காலத்தில் எத்தின? நாடகம் நடிச்சவர் தெரியுமே.... வலுவீரன்.

**சு.மூர்த்தி:** ஆ.... அவர் நடிச்சவர். ரவிச்சந்திரன் இப்படிச் சொல்லும்.

"பத்து மாதம் சுமந்தெனைப் பெற்றவளை பாசத்திற்கு இலக்கணமாய் திகழ்ந்தவளை நீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாய் என்றென்னைப் புகழ்ந்தவளை
கொல்லேன் ஒரு கணமும் உங்கள் முன் நில்லேன்"

ரவி: பத்து மாதம் சுமந்தெனைப் பெற்றவளை..... "பத்து மாதம் சுமந்தெனைப் பெற்றவளை பாசத்திற்கு இலக்கணமாய் திகழ்ந்தவளை நீடு வாழ்வாய் என்றென்னைப் புகழ்ந்தவளை கொல்லேன் ஒரு
கணமும் உங்கள் முன் நில்லேன்"

விசாலாட்சி: (கை தட்டுவார்) சபாஸ், அவன் தேப்பன்ர பிள்ளை.

முனிவர்(சுந்): யார் என்ன சொன்னாலும் சரி, எனது இளைய மகன் என் இனிய மகன் என் சொல்லை வேதமாகக் கொள்பவன் பரசுராமன் வா மகனே என் கட்டளையை நிறைவேற்று.

பரசு(துங்.ரா): தாயிற் சிறந்த கோயிலில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. உங்கள் வார்த்தைக்கு மறுவார்த்தை இல்லை. தாருங்கள் வாளை பாருங்கள். வீழும் தலை. எங்கே அம்மா.... மீனாட்சி....

சு.மூர்த்தி: மீனாட்சி....

(விசாலாட்சி வந்து ஏதோ சொல்வாள்)

இந்த நேரம்

பார்த்துத்தான் அவளுக்கு.

மீனாட்சி: (வந்து கொண்டு) நீ ஒண்டுக்கும் விடாய்

சு.மூர்த்தி: விடாய் தான். இதுவும் ஒரு விடாய்

பரசு(துங்.ரா): தயங்காமலே தந்தையின் கட்டளையை நிறைவேற்றுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மீனாட்சி தலை வெட்டப்படும் காட்சி)

**முனிவர்(சுந்):** மகனே தந்தையின் கட்டளையை தயங்காமல் செய்தாய். முந்தைவினைப்பயனை முடித்து வைத்தாய் எங்கு சென்றாலும் நீ ஏற்றம் பெறுவாய். வாழ்வாய் நீடு வாழ்வாய். வரம் தந்தேன். இன்னும் வரம் வேண்டுமென்றால் என்னைக் கேள்.... தயங்காமல் நான் தருவேன்.

**பரசு(துங்.ரா):** தந்தையே எனக்கு ஒரு வரம் வேண்டும். நான் மகிழ்ந்துவாழ......

**முனிவர்(சுந்):** செய்நன்றிக் கடனை நான் செலுத்த வேண்டும். மெய்யாய் நான் தருவேன். பொய்யில்லை. வரத்தைக் கேள்.

**பரசு(துங்.ரா):** என் தாய் எனக்கு வேண்டும். மீண்டும் அவர் உயிர் பெற வேண்டும்.

**முனிவர்(சுந்):** (சிரிப்பு) நீ புத்திசாலி மகனே... உன்னையும் காத்து உன் தாயையும் காத்து என்னையும் காத்துவிட்டாய் இதோ.... உன் தாய்.

**(மீனாட்சி மாலையுடன் வருவாள்) (எல்லோரும் கை தட்டுவர்)**

**சு.மூர்த்தி:** புதிய பார்வையாளர்கள் எங்களோடை கதைக்க வேணும் நல்லதோ கெட்டதோ அது பிரச்சினை இல்லை.

**விசாலாட்சி:** இஞ்சை சுந்தரம் மோள் முகம் பார்த்துக் கதைக்க கூப்பிடுறாளாம்.

**சு.மூர்த்தி:** எத்தனை நாள் பிள்ளையள் பேரப்பிள்ளையளின்ர முகத்தை பார்த்து தம்பிமார் மன்னித்துக் கொள்ளுங்கோ. அடுத்த முறைக்கு இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்தைப் பற்றி கதைக்க வேணும். நான் போட்டு வாறன்.

ரவி: ஓம்.... நாங்களும் நாடகம் பார்த்த சந்தோசத்தோடு போட்டு வாறம். அம்மா போட்டு வாறன்.

விசாலாட்சி: ஓம் தம்பி உடம்பைக் கவனிக்க வேணும் சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்.

ரவி: ஓமம்மா போட்டு வாறம்.... கருணாமூர்த்தி இப்ப என்ன நினைக்கிறீர்?

கருணா: நான் நினைக்க ஒண்டுமில்ல... அம்மா நினைக்கிறபடி நடப்பம். அவாவையே கேப்பம்... வாறன்....

## காட்சி - 4

### களம் மாறும் - வீடு

**புண்ணியவதி கட்டிலில் படுத்திருப்பாள். கருணாமூர்த்தி குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருப்பான். மணிக்கூட்டு முள்ளில் சத்தம் ஒலித்துக் கொண்டிருக்கும். சுகன்யா எழுந்து வந்து..**

சுகன்யா: என்னப்பா இன்னும் நித்திரை வரேல்லையோ யோசிச்சு யோசிச்சு வருத்தத்தைத் தேடாதை யுங்கோ....

கருணா: இண்டைக்கு ஒரு முடிவு நானெடுக்க போறனப்பா. அம்மா விரும்பிறதை மறுக்காம செய்வமப்பா.

சுகன்யா: நல்லது கேளுங்கோ. இப்ப போய் நித்திரையைக் கொள்ளுங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணா: நிம்மதி இருந்தாலெல்லோ நித்திரையும் ஓடி வரும் கண்ணோட கண்மூட என்னால ஏலாது.

சுகன்யா: சுடச்சுடக் கோப்பி ஒன்று சுறுக்காய்ப் போட்டுக் கொண்டு வாறன்.

**(சுற்றி சுற்றி நடப்பார்)**

கருணா: அம்மா அம்மா உங்களுக்காவும் எங்களுக்காகவும் தான் இதை இப்ப கேட்கிறன். தப்பாக நினைக்க வேண்டாம். உங்களின் நன்மைக்காகவும் தான். நீங்கள் விரும்பினால் முதியோர் இல்லத்தில் மகிழ்வாய் இருக்கலாம். அடிக்கடி வந்து உங்களை நாம் வந்து பார்க்கலாம். அம்மா... அம்மா.... அம்மா....

**தாய் பேச்சு மூச்சற்று கிடப்பார். சுகன்யா கோப்பியை கைநழுவ விடுகிறாள். ஓடி வருகிறாள்.**

**சோகமாக "வாழைக்குலை போட்டிருக்கு" பாடல் இடம் பெறும். பிள்ளைகள் வந்து அப்பம்மாவைப் பார்த்து அழுவர். ரவிச்சந்திரன் வருவார். பலரும் வருவார்.**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்தலும் கை தொழுவேன்.

**திரை விலக....**

**அவல ஒலிகள், சுவக்குரல், புகை மண்டலமான நிலை.**

**குரல்:** இரும்புச்சங்கிலி நொருங்கிப் போச்சுது. இழுத்துக் கட்டின தூண்களும் உடைஞ்சு போச்சுது. தெருவெல்லாம் புழுதி. தூரவெல்லாம் சகதி, இரவெல்லாம் விழிப்பு. உறவெல்லாம் பழிப்பு. ஓடு ஓடு உருக்குலைஞ்ச பேயைத் தேடு தேடு.... மூடு மூடு வெறித்தனம் செத்திட மண் போட்டு மூடு .. (இடது மத்தியிலிருந்து மத்திமத்திக்கு இளைஞன் வருவான். தாய், தந்தை மேடையின் மத்திய வலப்பகுதியிலிருந்து முன் மத்திய பகுதிக்கு வருவர்.

**இளைஞன்:** என்னை நீர் நெருங்காதே எதிரியாய்க் கருதாதே.. எதிர்த்தால் உதைப்பேன்.. பிடித்தால் உடைப்பேன்... சொன்னதைச்செய்வேன் சுருக்கிட்டு சாவேன்....

**பெற்றோர்:** பெற்றோர் நாங்கள்...... நீ எங்கட சொல்லை வேதவாக்காக மதிக்க வேண்டும்.

**இளைஞன்:** பிள்ளைகள் நாங்கள்.... எங்கட சொல்லையும் பெற்றோர் நீங்கள் மதிக்க வேண்டும்.

**பெற்றோர்:** நாங்கள் எப்பவும் உங்கட நன்மைக்குத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு படுகிறம்......

இளைஞன்: நீங்கள் உங்களுக்கு நன்மையெண்டு நினைக்கிறது எங்களுக்குப் பாதிப்பாக அமைந்தால்

பெற்றோர்: நீங்கள் சின்னப் பிள்ளைகள் உலகத்தைப் புரியாதவர்கள்.

இளைஞன்: எங்களுக்கெண்டு ஒரு உலகம் இருக்கு. அதை உங்களாலதான் புரிஞ்சு கொள்ளெலாமல் இருக்கு. தெரிஞ்சு கொள்ளெலாமல் இருக்கு.

**பாடல் மூலமான உரையாடல்**

இளைஞன்:
கட்டிளம் பருவத்தை அடைந்து விட்டேன்
கட்டுப்பாடுகளை ஏற்கமாட்டேன்
தாய் தந்தைக்கு அடங்க மாட்டேன்
நாய் போல் அலைந்து திரியமாட்டேன்

பெற்றோர்:
இனிவரும் காலம் உன் பெயர் சொல்ல
தனி ஒரு ஆளாய் உலகினை வெல்ல
பொறியியர், மருத்துவர் ஆக்கிட
நினைப்பது தவறாமோ?
பெற்றோர் மனதில் ஆசையை
வளர்ப்பது பிழையாமோ?

இளைஞன்:
தீர்மானம் மேற்கொள்ளும் தகுதி எமக்குண்டு
எதிர்க்க வேண்டாம்.

பெற்றோர்:
தன்மானம் காத்திடக் கட்டுப்பாடு வேண்டும்
மறுக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன்: மிருதங்கம், ஓர்கன், ஆர்மோனியம் பழக
தடுக்க வேண்டாம்.

பெற்றோர்: கருத்தூன்றிப் படித்திட உதவாது
உதுகளை நினைக்க வேண்டாம்.

இளைஞன்: நாடகம், நடனம், பாட்டுப் பாடினால்
மனம் குளிரும்.

பெற்றோர்: கூத்தும் கும்மாளமும் சோறு தராது
எம் வயிறெரியும்.
இத்தனை நாள் வைத்தியத்துக்குப் பிறகும் உது
அடங்கேல்ல எண்டால்... இனிப் புதுவைத்தியம்.

இளைஞன்: நோயும் பிணியும் எனக்கு இல்ல...
நாய் போல என்னைத் துரத்தாதையுங்கோ....

பெற்றோர்: மந்திரத்தாலே உன்னை மனிசனாக்குவோம்.
அந்தரிக்கிற உன்னை சந்தியில விடமாட்டோம்.

இளைஞன்: என்ர உணர்வுகளைப் புரிஞ்சு கொள்ளுங்கோ...
என்ர தேவைகளைத் தெரிஞ்சு கொள்ளுங்கோ...
என்ர ஆசைகளை அறிஞ்சு கொள்ளுங்கோ...

பெற்றோர்: இனி மந்திரவாதியோட பேசு... மனதை
மாற்று.... உடலைத் தேற்று...

**மந்திரவாதி கோரமான மந்திர உச்சாடனத்துடன் பயங்கரமான உடலசைவுகளுடன் பின்மத்தியிலிருந்து தோன்றுவார் கிப்றிஸ்ஸில் மந்திரம் ஒலிக்கும்.**

மந்திரவாதி: டேய்.... சின்னக்குட்டி... என்னடா விளையாட்டு
ஆரோட வெறியாட்டு தெரியுமோடா? என்னை...
அடங்க மறுத்த சுடலை மாடனையே கிடங்கு
வெட்டி மடக்கி விழுத்தி முடக்கிப் போட்டவனடா
இந்தக் கடம்ப இடும்பன். ( **மந்திர உச்சாடனம்** )....
இந்தக் குஞ்சு அப்பாவிக் குஞ்சு தப்பிப் போ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் போ... அவனை வருத்தாதை... அவன் ஒண்டும் அறியாத அப்பிராணி... அவனை விட்டுப் போ...

**இளைஞன்:** எனக்கு ஒண்டும் இல்லை... நான் என்னைப்பற்றி யோசிக்கிறன். எங்களைப் பற்றி யோசிக்கிறன். எல்லோரையும் பற்றி யோசிக்கிறன் எனது உலகத்தை நான் காணுறன். அதில வாழ முயற்சிக்கிறன். பயிற்சி எடுக்கிறன். என்ர உலகம் பரந்து விரிந்து விசாலமாயிருக்கிற உலகம்... குறுகின வட்டத்துக்க குறுகின உலகத்துக்கை என்னால வாழேலாது. ஏன் என்ற கேள்வியை கேட்க மனம் துடிக்குது. காரணகாரியத் தொடர்புகளை அறிய மனம் ஏங்குது. இது பிழை எண்டுதான் என்னில பிழை பிடிக்குது சமூகம். ஆனால் நான் நானாக இருக்கிறன்.

**மந்திரவாதி:** ஆ...ஆ.... பரந்த உலகம், விரிந்த உலகம், குறுகின வட்டம், விரிந்த வட்டம், ஏன் என்ற கேள்வி, காரண காரியம்... நான் நானாக..... என்னடா இது எனக்கு ஒன்றும் புரியவில்லை... துட்ட ஆவியே இக் குஞ்சை விட்டுப் போ... ஓடிப் போ... சாட்டையடிதான் இனி இறுதி மருந்து நார் நாராய்க் கிழித்து விடுவேன்...

**இளைஞன்:** அதை நான் செய்கிறேன்

தகஜூனு தகதிமி தாம் தாம் தாம்
தகஜூனு தகதிமி தாம் தாம் தாம்
தகஜூனு தகதிமி தாம் தாம் தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகஜுனு தகதிமி தாம் தாம் தாம்
தாகிட தரிகிட தாகிட தரிகிட
தரிகிட தரிகிட தரிகிட தாம்
தரிகிட தரிகிட தரிகிட தாம்
தரிகிட தரிகிட தரிகிட தாம்

**மந்திரவாதியும் இளைஞனும் ஒருவரை ஒருவர் எதிர்த்துச் சண்டையிடுதல்**

**இது நடன அமைப்பில் இடம் பெறும். மந்திர வாதி தோற்பான்.**

**மந்திரவாதி:** அடிக்காதை அடிக்காதை ஐயோ! வயித்துப் பிழைப்புக்குத்தான் இந்தத் தொழிலில் இறங்கினனான். மன்னித்து விடப்பா

**இளைஞன்:** உங்கட வயித்துப் பிழைப்புக்காக எங்கட மனங்களைப் பிழிஞ்சு இழைக்கப் பண்ணுறீங்கள் மனங்களை ரணங்களாக்கிறியள்.

**மந்திரவாதி:** என்னைத் தப்பிப் போக விடு. இனித் தப்பே செய்ய மாட்டன்

**இளைஞன்:** ஓடு.... இந்தப் பக்கம் இனித் தலை காட்டாதை ஓடு...

**(மந்திரவாதி பின் வலது வழியாக ஓடுவான்)**

**இளைஞன்:** சிறுவர்கள் எங்கள் சூரியனும் பெரியோர்கள் கையில் சுருண்டது. கல்வித்துறையும் மருண்டது. இளைஞர்கள் வாழ்வு நெறி பிறழ்ந்தது. அதனால் எங்கள் உலகம் இருண்டது. காவல் துறை வெருண்டது. அதனால் வாழ்வும் வேண்டேன். உயிரும் வேண்டேன். உணர்வும் வேண்டேன். கடலில் வீழ்வேன் என் கதையை முடிப்பேன். கடலை நோக்கி ஓடுவான். கடலில் அழகான ஜாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று முன் இடதில் இருந்து மத்தி மத்திக்கு மிதந்து வருவதைக் காண்பான்.

இளைஞன்: அழகான ஜாடி ஒன்று கடலிலே மிதந்து வருகிறது. மர்மமான வெடி பொருளாக இருக்கக் கூடும். பலரின் உயிரைக் காவு கொண்ட மர்மமான வெடிபொருள் போல் இதுவும் இருக்கக் கூடும். யாரோ ஒரு அப்பாவி வீணாக அழிந்து போவதை விட அழிவைத் தேடும் நானே இவ் வெடிபொருளால் வெடித்துச் சிதைந்து போதல் யாருக்கும் நஸ்டம் தராது. நானே எடுக்கிறன் சாவை அழைக்கிறேன்.

(ஜாடியிலிருந்து பூதம் ஒன்று தோன்றும்.)

அதிகாலை நேரக் குளிர் தென்றல் வீச
புதிதாகப் பூத்த மலர் வாசம் போல
வளைவாகத் தோன்றும் வானவில் ஆக
அழகான பெண்ணாய் பூதத்தார் எழுந்தார்

பூதம்: நான் பூதம் பலம் பொருந்திய பூதம் அண்ட சராசரங்கள் அனைத்தையும் நான் அறிவேன். சண்ட மாருதச் சூழலை அடக்குவேன். அடிபணிய வைப்பேன். அன்பைக் கண்டால் எனக்குப் பெருமை. ஆதரித்ததால் நான் பதுமை. நீ அழைத்தால் நான் உன் அடிமை. என்ன வேண்டும் கேள்? ஏது வேண்டும் கேள்.? கேட்டதைத் தருவேன். நீர் நினைப்பதை முடிப்பேன். கேள்...

இளைஞன்: எனக்குச் சாவு வேண்டும். தருவாயா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூதம்:** **சிரிப்பு** சாவா உனக்கா...? வாழத்துடிக்கும் வயது உலகை ஆழத்துடிக்கும் வயது. மாளத் துடிப்பதேனோ..? மகனே சாவை அழைப்பதேனோ..?

**இளைஞன்:** வாழப்பிடிக்கவில்லை. என் வாழ்வில் சிறப்பும் இல்லை. சாவை எனக்குத்தா.. சாவை எனக்குத்தா.....

**பூதம்:** நாவை அடக்கு. சாவை விலக்கு. சரித்திரம் படைத்திடும் வயது காளை நீ கோழையாவதேன்.

**இளைஞன்:** நான் நினைத்தது எதுவும் நடக்கவேயில்லை. என் ஆசைகள் எப்போதுமே நிறைவேறவில்லை. என் கனவுகள் ஒருபோதும் மெய்ப்படவில்லை.

**பூதம்:** கொடுமை, இளமையில் கொடுமை வறுமையல்ல. உனது நிலைமை. அதுதான் கொடுமை விளக்கமாகச் சொல் விடிவு வீடு தேடி வரலாம்.

**இளைஞன்:** வீடு அதுதான் என் வேதனைச் சின்னம். அடிமைச் சாசனம். அடக்கு முறையின் ஆரம்பம்.

**பூதம்:** வீடு உன்னை வேதனைப் படுத்துகிறதா? சோதனை சோதனை இன்னும் விளக்கமாக உரைத்திடு.....

**இளைஞன்:** பூதமே உன்னைத்தான் கேட்கிறேன்.... பாட்டுப் பாடுவது பிழையா?

**பூதம்:** இசையால் வசமாகாத உலகம் எது?

**இளைஞன்:** ஆடுவது அநாகரிகமா?

**பூதம்:** ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காதே.

**இளைஞன்:** ஓர்கன் வாசிப்பது தவறா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூதம்:** ஓராயிரம் இசை மழையை ஓரிடத்தில் காணலாம்.

**இளைஞன்:** மிருதங்கம் வாசிப்பதால் அருகிவிடுமோ என் அறிவு?

**பூதம்:** பெருகிவிடும்... உன் கல்வி அறிவு. மகிழ்வான சூழலில் தான் ஆற்றல். மகிழ்வான சூழலில் தான் தேடல். மகிழ்வான சூழலில் தான் படைப்பு.... மகிழ்வான சூழலைக் கொடுப்பவைதான் ஆடல், பாடல், இசை, நாடகம், சித்திரம்...

**இளைஞன்:** இவற்றையெல்லாம் தயவு செய்து என் தாய் தந்தையருக்கு, ஆசிரியருக்கு அறிவித்தால்... இனி வரும் சிறுவராவது இனிதாய் வாழ வழி கிடைக்கலாம்.

**பூதம்:** ஓஹோ பிரச்சினை இப்படிப்போகுதோ..? உங்கள் உலகில் விடயம் தெரிந்தவர்களால்தான் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. வயிற்றிலே குழந்தை உருவாகிய உடனேயே வைத்தியராய் வரவேண்டும் என்று கற்பனை செய்யும் பைத்தியங்களாகி விட்டனர் இன்றைய பெற்றோர்கள்.

**இளைஞன்:** என் விருப்பமின்றி "பையோ சையன்ஸ்" எடுக்க வைத்தனர். நான் நேசித்த தமிழ், நாடகமும் அரங்கியலும் எட்டாக்கனியாகின. மிருதங்கம், ஓர்கன், கிற்றார் வாசிப்பதை அடியோடு நிறுத்தி விட்டு, அவற்றை எங்கோ மறைத்து வைத்து விட்டு பரீட்சையில் கவனம் வைக்கட்டாம். அதிக நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்சனல் கிளாஸில் இருக்கட்டாம். நித்திரை நேரத்தைக் குறைக்கட்டாம். எல்லாம் என் நன்மைக்காம்.

**பூதம்:** அது மட்டுமல்ல. நண்பரோடை செல்லாதை, நாடகம் பார்க்காதை, நல்லது கெட்டது ஊரில நடக்கும் அதை நாடாதை, ரீ.வி பாக்காதை, computer இல் கை வைக்காதை... இன்னும் பல இன்னும் பல.

**இளைஞன்:** இத் தொல்லைகளிலிருந்து விட்டு விடுதலையாகி நிற்கத்துணிந்தேன்.

**பூதம்:** நீ ஒருவன் மட்டும் விட்டு விடுதலையானால் போதுமா? உன்னைப் போலுள்ள ஏனையோர்...

**இளைஞன்:** என்னைப் போல் இன்னும் பலரா...?

**பூதம்:** ஆம் மாதா, பிதா, குரு ஆகியோரின் தவறான முடிவால் கல்வியில் இடை விலகுகின்றனர். பலர் பொருத்தப்பாடற்ற பாடத் தெரிவால் பரீட்சையில் சித்தியெய்தத் தவறுகின்றனர். பெற்றோரின் கல்வி தொடர்பான அழுத்தங்களினால் தற்கொலை செய்கின்றனர். இளவயது தற் கொலைகள், இப்படி வெளிவராத தற்கொலைகள் ஏராளம் தாராளம்...

**இளைஞன்:** எனது தற்கொலை முயற்சியும் இதனால்தான் விளைந்தது.

**பூதம்:** இளைஞனே ஒரு கணமாவது சந்தோசமாக இருக்க வேண்டும் என்று எண்ணியதே இல்லையா? அதற்கு வழிவகையைத் தேடியதே இல்லையா? உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் ஆசை என்பதே இல்லையா?

இளைஞன்: ஆசை என் உள்ளத்தின் ஆசைகள் ஏராளம் ஏராளம். ஆசைகள் அரங்கேறாத நிராசைகளால் ஏக்கங்கள், ஏமாற்றங்கள் தராளம் தராளம்.

பூதம்: உன் ஏக்கங்கள் என்ன?

இளைஞன்: என் அம்மாவும் அப்பாவும் என்னைப் பார்த்து "என் செல்லம் வாடா" என்று ஆசையோடு அழைக்கும் ஒரு இனிய நாள் வாராதா? என்னோடு இருந்து இனிய கதைகள் பேசி சேர்ந்துண்டு மகிழும் இனிய பொழுது இனியும் வராதா? நான் விரும்பும் பாடத்துறையைத் தெரிவு செய்ய.... நான் விரும்பும் பாடலை உரத்துப் பாட, நான் விரும்பும் இசைக்கருவிகளை இசைத்துப் பார்க்க, மாலை நேரத்தில் மனதுக்குப் பிடித்த நண்பர்களுடன் விளையாடிப் பொழுது போக்க அனுமதியும் ஆறுதலும் தரும் பெற்றோராய் மாறும் நாள் வாராதா? இரும்பைக் காந்தம் இழுப்பது போல எனை ஈர்க்கும் ஓர் பாடசாலை வேண்டும். அங்கு இதயமுள்ள ஓர் அதிபர் வேண்டும். சிந்தனை, சொல், செயலால் எனை ஈர்க்கும் ஓர் ஆசிரியர் குழாம் வேண்டும்.

பூதம்: நீ விரும்பும் தாய், தந்தை நீ நேசிக்கும் பாடசாலை நீ விரும்பும் ஆசிரியர் குழாம் அனைத்தும் தாறேன். வீட்டிற்குச் செல் நடந்தவற்றைப் பற்றி மாலை வந்து என்னோடு பேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன்: நீ எங்கேயிருப்பாய்?

பூதம்: உன்னோடு இருப்பேன். எனை நினைக்க உன் முன் வருவேன் சென்று வா.

**வீடு**

**(தாயும் தந்தையும் வலது மத்தியிலிருந்து பிரவேசித்து மத்திமத்தியில் உரையாடுவர்.)**

தாய்: மகன் ஏன் இன்னும் வரேல்ல? நேரம் போகுது.

தந்தை: தன்ர நண்பர்களோடை விளையாடிப் போட்டு வருவான் தானே..

தாய்: ஓமப்பா அவன் என்ன சின்னப் பிள்ளையே ... எல்லாம் தெரிஞ்ச பிள்ளைதானே..

தந்தை: மகன் வாறான்... வாங்கோ ராசா...

தாய்: செல்லம் ஓடி வாங்கோ...ரீயும் வாய்ப்பனும் றெடி. உங்களைத்தான் பாத்துக் கொண்டு இருக்கிறம் வாங்கோ

இளைஞன்: வாய்ப்பன் நல்லா இருக்கு.... எங்கால அம்மா

தாய்: செல்லத்துக்கு வாய்ப்பன் பிடிக்கும் எண்டு நானே சுட்டனான்.

இளைஞன்: Thank you அம்மா

தந்தை: அப்பாவுக்கும் Thank you சொல்ல வேணும். நான் தான் வாய்ப்பனுக்குப் பதமாக மாவைச் சேர்த்து குழைத்துக் கொடுத்தனான்.

இளைஞன்: Thank you அப்பா

தாய்: மிருதங்க வகுப்புக்கு நேரம் வந்திட்டுது.

தந்தை: ஓம் அப்பிடியே ஓர்கன், கிற்றார் வகுப்புக்கும் போட்டு வாங்கோ.

இளைஞன்: ஓமம்மா... அம்மா....

தாய்: என்ன செல்லம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன்: O/L றிசல்ஸ் வந்திட்டுது தானே....

தந்தை: ஓம் ஓம் 8A,B

இளைஞன்: நான் தமிழ், நாடகமும் அரங்கியலும், இந்து சமயம் படிக்கப் போறன்.

தாய்: ஓம் அதுக்கென்ன நல்லாப் படியுங்கோ.

தந்தை: படிக்கிறது நீர் பாடங்களையும் நீர்தான் தெரிவு செய்ய வேணும்.

இளைஞன்: அம்மா நான் ஸ்கூலுக்குப் போட்டு வாறன்.

## பாடசாலை

இளைஞன்: Good Morning ரீச்சர்

ரீச்சர்: Good Morning ஆதவன் நீர் எழுதின நாடகத்தை இண்டைக்கு தமிழ் மன்றத்தில மேடையிலே நடிச்சுக் காட்ட வேணும்.

இளைஞன்: ஓம் ரீச்சர் இளங்குமணனுக்கு நடிக்கிற இனியவன் இன்னும் வரேல்ல எண்டதால நீங்களே அந்தப் பாத்திரத்தை வாசித்து நடிக்க வேணும்.

ரீச்சர்: ஓம் தராளமாக நடிக்கலாம் அது எனக்கு விருப்பமும் கூட

**ரீச்சர் இளங்குமணனாகவும் இளைஞன் குமணனாகவும் வேடம் போட்டு நடிப்பர்**

குமணன்: செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பது என் அரண்மனை. பாவலர் நாவலர் எல்லோரும் வாருங்கள்.... பசியைத் தீர்த்துக் கொள்ளுங்கள், பரிசுப் பொருட்களைப் பெற்றுச் செல்லுங்கள்

இ.குமணன்: நிறுத்துங்கள் கொடையை

குமணன்: தம்பி இளங்குமணா வா அருகே வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனத்தில் அமர்ந்து கொள்.

**இ.குமணன்:** ஆசனத்தில் அமர நான் இங்கு வரவில்லை போசனத்திற்காகவே அலையும் இந்தப் போக்கிரிகளை ஓட ஓட அடித்து விரட்டப் போகிறேன்.

**குமணன்:** தம்பி ஆத்திரத்தால் அறிவை இழக்காதே.

**இ.குமணன்:** அறிவை இழப்பவன் நானல்ல.

**குமணன்:** அப்படியென்றால்

**இ.குமணன்:** நீங்கள் தான் அறிவை இழந்து விட்டீர்கள் எங்கள் நாட்டின் செல்வமனைத்தையும் பஞ்சையருக்கும் பாணருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள் அணிமணிகள் ஆனை சேனை அத்தனையும் அள்ளி அள்ளி கவிமணிகள் வாழ்வதற்கே தந்துவிட்டால்....

**குமணன்:** தந்துவிட்டால்....

**இ.குமணன்:** துணிமணியும் இல்லாத ஆண்டி மடம் ஆகிவிடும் எமது நாடு. இனியும் இதை அனுமதிக்க முடியாது அண்ணா.

**இளைஞனின் பெற்றோர்கள் முன் இடதில் இருந்து கையைத் தட்டியபடி வருவார்கள்**

**தந்தை::** ஆசிரியரும் மாணவனும் அருமையாக நடிக்கிறீங்கள்

**தாய்:** ஆசிரிய மாணவ உறவு இப்படித்தான் இருக்க வேணும்

**இளைஞன்:** சொல்லால் செயலால் ஒன்றுபட்ட தாய் தந்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியால் கருத்தொருமிப்பால் இணைந்த ஆசிரியர், இதுதான் என் உலகம். நான் காண விளையும் உலகம் நான் வாழ விரும்பும் உலகம் ஏய் பூதமே என்னருகே உடனே ஓடி வா...

**பூதம்:** வந்தேன் வரம் பல தருவேன் வளம் பல பெறுவாய்

**இளைஞன்:** உனது கிருபையால் இன்று நான் காணும் உலகம் நித்தமும் வேண்டும். உன்னை நித்தலும் கை தொழுவேன் எனக்கு நீ வரம் தர வேண்டும். இன்று போல் எனறென்றும் நான் மகிழ்ந்து வாழ இந்த உலகம் எனக்கு வேண்டும்.

**பூதம்:** இந்த மகிழ்வும் நிறைவும் தொடர்ந்து வரவேண்டும் என்றால் மனிதர் உம் மனதில் மாற்றங்கள் பல ஏற்பட வேண்டும்.

**தந்தை:** அதைத் தாங்கள் எமக்குச் சொல்ல வேண்டும்.

**பூதம்:** உம்மைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும். தன்னலம் கருதாது இம் மண்ணிலே வாழ வேண்டும். பொய், போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது, ஆட்கடத்தல், களவு, கற்பழிப்பு, ஒருவருக்கொருவர் குழிபறித்தல் இன்னும் இன்னும் இவற்றை மனிதர் நீர் மறத்தல் வேண்டும். மனிதராய் வாழ வேண்டும்.

**பெற்றோர்:** முயற்சிக்கின்றோம்

**இளைஞன்:** பூதமே எம்முடனேயே இருந்து விடு..

**பூதம்:** உங்களால் நான் சாப விமோசனம் அடைந்தேன். இப்போது எனது உலகிற்குச் செல்கிறேன் வருவேன்...வாழ்க..வாழ்க...பல்லாண்டு

**(பூதம் மறையும்)**

**திரை மூடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதுசொம்

இரு கூத்தும் நா நாடகமும்

க. இ. கமலநாதன் வட இலங்கை சங்கீத சபையில் "நாடகக் கலாவித் தகர்" பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் B.A, Dip in Ed, M.A in Culture, MEd (Merit) ஆகிய பட்டங் களையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. நாடத்துறையூடாக முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சிறந்த வளவாளராகச் செயற்பட்டு வருகின்றார். இவரது ஆக்கங்கள் மேன்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

திரு.சதாசிவம் அமிர்தலிங்கம்
மேலதிக பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி - கோப்பாய்.

க. இ. கமலநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூ ரியைத் தளமாகக் கொண்டு இயக்கப்பட்ட கல்வி விழிப்புணர்வுக் குறும்படங் கள் பலரதும் பாராட்டுக்களையும் வரவேற்பையும் பெற்றன. யாழ் மாவட்டத் திற்கு அப்பால் போரால் நலிவடைந்த வன்னிப் பிரதேச மாணவர்களுக்கும் அரங்கினூடாக மகிழ்ச்சிகரமாகக் கற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். கட்டாயக்கல்வி விழிப்புணர்வு வீதி நாடகங்களை அவ்வவ் வலயங்களினூடாக செயற்படுத்தி வருகின்றார். இவரது செயற்பாடடுகள் மேன்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

பாலசுப்பிரமணியம் தனபாலன்
இணைப்பாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி –கோப்பாய்

*Caxton Printers*, Kalvijankadu

விலை: 300/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org